




# உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் துறைசார்ந்த செயற்திட்டங்களிலிருந்து (புரநெகும) எதிர்பார்த்த பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளும் செயன்முன்னேற்றத்தினை மதிப்பாய்வு செய்தல்.

டபிள்யூஎன்பீ$_2$/சீபீ/எச்/எல்ஜீஈஎஸ்பி/பிஏ/2019

## தேசிய கணக்காய்வு அலுவலகம்.

# உள்ளடக்கம்


| | | | | விபரம் | பக்க இல. |
|---|---|---|---|---|---|
| 1 | | | | நிறைவேற்றுப் பொழிப்பு | 54-55 |
| 2 | | | | அறிமுகம் | 56-61 |
| | 2.1 | | | பின்னணி | 56-60 |
| | | 2.1.1 | | செயற்திட்டத்தின் குறிக்கோள் | 56-59 |
| | | | 2.1.1.1 | பஸ் நிறுத்துமிடங்களின் எதிர்ப்பார்த்த குறிக்கோள் | 57 |
| | | | 2.1.1.2 | நீர் வழங்கல் செயற்திட்டங்களிலிருந்து எதிர்ப்பார்கின்ற குறிக்கோள்கள் | 57 |
| | | | 2.1.1.3 | பல்நோக்கு கட்டிடங்களிலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் | 57-58 |
| | | | 2.1.1.4 | நூல் நிலையங்களிலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் | 58 |
| | | | 2.1.1.5 | வாராந்த சந்தைகளிலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் | 58-59 |
| | | | 2.1.1.6 | உடல்நல மேம்பாட்டு நிலையத்திலிருந்து எதிர்ப்பார்க்கின்ற குறிக்கோள்கள் | 59 |
| | | | 2.1.1.7 | தகனச்சாலையிலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் | 59 |
| | | 2.1.2 | | மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் கடமைகள் | 59 |
| | | 2.1.3 | | பிரதேச சபை | 60 |
| | 2.2 | | | கணக்காய்விற்கான அதிகாரம் | 60 |
| | 2.3 | | | தலைப்பினைத் தெரிவுசெய்யும் அடிப்படை | 60 |
| | 2.4 | | | கணக்காய்வின் நோக்கெல்லை | 60 |
| | 2.5 | | | இக்கணக்காய்வின் குறிக்கோள் | 61 |
| 3 | | | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | 61-90 |
| | 3.1 | | | திட்டமிடல் | 61-62 |
| | | 3.1.1 | | தொடக்க ஆய்வுகள் | 61 |

| | | | |
|---|---|---|---|
| | 3.1.2 | கூட்டிணைந்த திட்டம் | 62 |
| | 3.1.3 | செயல் நடவடிக்கைத் திட்டம் | 62 |
| | 3.1.4 | நிதித்திட்டம் | 62 |
| 3.2 | | செயற்திட்டங்களை அமுல்படுத்துதல் | 63-67 |
| | 3.2.1 | செயற்திட்டங்கள் மற்றும் உப செயற்திட்டங்களை ஆரம்பித்தலில் தாமதம் | 63 |
| | 3.2.2 | உப செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதங்கள் | 63-65 |
| | 3.2.3 | உப செயற்திட்டங்களை திட்டமிடலும் நிர்மாண வேலைகளின் பொருத்தத் தன்மையும் | 65-67 |
| | (அ) | மாவதகம பஸ்தரிப்பிடம் | 65-66 |
| | (ஆ) | ரெமுன நீர்த்திட்டம் | 66 |
| | (இ) | உடபலாத நீர்த்திட்டம | 66-67 |
| | (ஈ) | வெலிவிடிய திவுதுர பிரதேச சபைக் கட்டிடத்தில் மின்சார படிக்கட்டுக்களைப் பொருத்துதல் | 67 |
| 3.3 | | செயற்திட்டத்தின் செயலாற்றல் | 67-90 |
| | 3.3.1 | நிதி செயலாற்றல் | 67 |
| | 3.3.2 | பௌதீக செயலாற்றல் | 68-90 |
| | | 3.3.2.1 பயன்படுத்தப்படாத உப செயற்திட்டங்கள் | 68-76 |
| | | (அ) வண்ணாத்தி வில்லு நீர்த்திட்டம் | 69-70 |
| | | (ஆ) வில்கமுவ நீர்த்திட்டம் | 70 |
| | | (இ) மதுராவல பிரதேச சபை – ரெமுன மற்றும் திக்லந்த நீர்த்திட்டம் | 70-71 |
| | | (ஈ) மஹவ பொல்பிதிகம நீர் வழங்கல் முறைமை | 71-72 |
| | | (உ) ரிதிகம பஸ்தரிப்பிடம் | 72-73 |
| | | (ஊ) மீகஹகிவுல பஸ் நிறுத்துமிடம் | 73 |
| | | (எ) கிரம பஸ்தரிப்பிடம் | 73-74 |
| | | (ஏ) லங்காபுர பஸ்தரிப்பிடம் | 74-75 |
| | | (ஐ) இம்புல்பே பல்நோக்கு கட்டிடம் | 75 |
| | | (ஒ) ஹல்துமுல்ல பல்நோக்கு கட்டிடம் | 75-76 |

| | | |
|---|---|---|
| (ஓ) | இபலோகம, பலாகல, திரப்பன உடல்நல நிலையங்கள் | 76 |
| 3.3.2.2 | குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்ட உப செயற்திட்டங்கள | 76-81 |
| (அ) | ரம்பேவ பல்நோக்கு கட்டிடம் | 76-77 |
| (ஆ) | திரப்பனை பல்நோக்கு கட்டிடம் | 77 |
| (இ) | நாவுல பிரதேச சபையின் பல்நோக்கு கட்டிடம் | 77 |
| (ஈ) | மினிபே பிரதேச சபையின் பல்நோக்கு கட்டிடம் | 78 |
| (உ) | அம்பன்கங்க கோரலே, கங்கவட கோரலே, தும்பனை ஆகிய பிரதேச சபைகளின் பல்நோக்கு கட்டிடம் | 78 |
| (ஊ) | பியகம மற்றும் மதுராவல பல்நோக்கு கட்டிடம் | 78 |
| (எ) | வலல்லாவிட பல்நோக்கு கட்டிடம் | 79 |
| (ஏ) | வலப்பனே பிரதேச சபையின் ராகல பல்நோக்கு கட்டிடம் | 79 |
| (ஐ) | நாகொட பல்நோக்கு கட்டிடம் | 79 |
| (ஒ) | கல்பிட்டி நூல் நிலையக் கட்டிடம் | 79-80 |
| (ஓ) | திஸ்ஸமகாராம வாராந்தச் சந்தை | 80 |
| (ஔ) | சூரியவெவ வாராந்தச் சந்தை | 81 |
| (க) | இரத்தொட வாராந்தச் சந்தை கட்டிடம் | 81 |
| 3.3.2.3 | எதிர்பார்த்த பிரதிபலன்கள் இல்லாத செயற்திட்டங்கள் | 81-88 |
| (அ) | மாவத்தகம பஸ்தரிப்பிடம் | 82 |
| (ஆ) | உடுதும்பர நீர்த்திட்டம் | 83 |
| (இ) | இரத்தோட்டை நீர்த்திட்டம் | 83-84 |
| (ஈ) | லக்கல பல்லேகம நீர் செயற்திட்டம் | 84 |
| (உ) | இராஜாங்கனை நீர் செயற்திட்டம் | 84 |
| (ஊ) | பொல்பிதிகம பல்நோக்கு கட்டிடம் | 84-85 |
| (எ) | கலன்பிந்துனுவெவ பல்நோக்கு கட்டிடம் | 85 |

| | | | |
|---|---|---|---|
| | (ஏ) | பதவிய பல்நோக்கு கட்டிடம் | 85-86 |
| | (ஐ) | ஹொரவ்பதான பல்நோக்கு கட்டிடம் | 86 |
| | (ஒ) | இபலோகம பல்நோக்கு கட்டிடம் | 86 |
| | (ஓ) | வெலிவிடிய திவுதுர பல்நோக்கு கட்டிடம் | 86-87 |
| | (ஔ) | கரந்தெனிய, தவலம, பிடபெத்தர, கொடபொல, இமதுவ பிரதேச சபைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடங்கள் | 87 |
| | (க) | புளத்கொஹுபிடிய பல்நோக்கு கட்டிடம் | 87-88 |
| | (கா) | அயகம பல்நோக்கு கட்டிடம் | 88 |
| | (கி) | ஹெட்டிபொல தகனச்சாலை | 88 |
| | 3.3.2.4 | எதிர்பார்த்த குறிக்கோள்களுக்கு புறம்பாக அலுவலகத்தை நடாத்துவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடம் | 89-90 |
| | (அ) | உடுபத்தாவ பல்நோக்கு கட்டிடம் | 89-90 |
| | (ஆ) | பாதஹேவாஹெட பல்நோக்கு கட்டிடம் | 90 |
| | 3.4 | பெறுகை நடைமுறை | 90 |
| 4 | | சிபாரிசுகள் | 91 |
| | | பின்னிணைப்பு 01 (Overall Project Implementation Plan) | 92 |
| | | பின்னிணைப்பு 02 (2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள்) | 93-94 |
| | | பின்னிணைப்பு 03 (Detailed Cost Estimates by Year) | 95 |

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கையில் உள்ளூராட்சி சம்பந்தமாக மிகவும் நீண்ட வரலாறு காணப்படுவதுடன் அது கி.பி 03 ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட ஆவணங்களிலிருந்து கிடைத்த தகவல்களை விளங்கிக்கொள்வதனால் உறுதிப்படுத்தப்படுகின்றது என்பது அறிவாளிகளின் அபிப்பிராயமாகும். தற்பொழுது உள்ளூராட்சி நிறுவனங்கள் மூன்று வகையானவையாகும். அதாவது மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்பனவாகும். இதில் சிறிய உள்ளூராட்சி நிறுவனம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேச சபையாகும்.'' 1987 ஆம் ஆண்டின் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட 13வது அரசியலமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மாகாண சபைக்குரிய விடயமாகக் காணப்பட்டது.

விசேடமாக நாட்டின் பிரதான நகரங்களிலிருந்து தொலைவில் காணப்படுகின்ற பிரதேச சபைகளினால் பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய சேவைகளை வழங்குதல், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் என்பன அப்பிரதேச சபைகளின் சுயவலிமையில் மேற்கொள்ளுதல் சிக்கலாக இருந்ததன் காரணமாக மத்திய அரசாங்கத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு கடன் செயற்திட்டங்களின் மூலம் இந்த உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு பல்வேறு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

பிரதேச சபை மட்டத்தில் கருத்தில் கொள்கையில் பிரதேசத்தை நிருவகிக்கின்ற தலைமைத்துவத்தின் வழிகாட்டல் மற்றும் உத்தியோகத்தர்களின் நேர்மையான ஈடுபாட்டின் அடிப்படையில் பொருளாதார சிக்கலினை இல்லாமலாக்குவதன் மூலம் பொதுமக்களுக்கு உச்ச அளவான சேவையை வழங்குவதற்காக நடவடிக்கை எடுத்து வருகின்ற பிரதேச சபைகளும் இல்லாமல் இல்லை. அவை மிகவும் குறைந்த அளவு மாத்திரமாகும். பொதுமக்களுக்குத் தேவையான செயற்திட்டங்களை இனங்கண்டு கொள்ளாமை, தேவைப்பாட்டினை தொடர் ஒழுங்கில் ஒழுங்குபடுத்தாமை முதலிய விடயங்களின் காரணமாக சில உள்ளூராட்சி நிறுவனங்கள் போதியளவிலான முன்னேற்றங்களைக் காட்டியிருக்கவில்லை.

இலங்கையின் உள்ளூராட்சி நிறுவன முறைமைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நோக்கெல்லைக்குள்ளான கடமைகள் இரண்டு வகையாகும்.

- கண்டிப்பாக நிறைவேற்றுவதற்கு கடப்பாடு செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள்.
- நிறைவேற்றுவதற்கு அதிகாரம் இருந்தும் கட்டாயம் அற்ற செயற்பாடுகள்.

ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் நிறைவேற்றுவதற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனைப் போல கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டிய செயற்பாடுகளாக அதிகாரப் பிரதேசத்திலுள்ள வீதிகள் மற்றும் பொதுச் சுகாதாரத்திற்குரியதான கடமைகள் சட்ட ரீதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அந்நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் அல்லது வேண்டுமென்றே தவிர்த்தலானது கடமைகளையும் பொறுப்புக்களையும் தவிர்ப்புச் செய்தலாகும்.

நிறைவேற்றுவதற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தும் கண்டிப்பாக நிறைவேற்றுவதற்கு சட்ட ரீதியாக நிர்ணயிக்கப்படாத செயற்பாடுகளும் உள்ளன. உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், நலன்பரிச் சேவைகள், கல்வி, சமய மற்றும் கலாச்சார சேவைகள் இவற்றிற்குரியவையாகும். இச்சேவைகளை வழங்குவதற்கு அதிகாரம் கிடைத்திருந்தும் அவற்றை

நிறைவேற்றக்கூடியதாக இருப்பதானது நிறுவனத்தின் வளங்களின் அளவு மற்றும் பொதுமக்கள் அது தொடர்பாக மேற்கொள்கின்ற வேண்டுதல்கள் அல்லது தேவைப்பாட்டினை கவனத்தில் எடுத்துக்கொண்டதாகும். நிறுவனத்தினால் முன்னுரிமை வழங்கப்படுவது நிறுவனத்தின் கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் வகையிலாகும்.

அதற்கிணங்க மகப்பேற்று சிகிச்சையில் ஆரம்பித்து தகனச் சாலை வரையான மனித வாழ்வுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கும் பொறுப்பு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மகப்பேற்று சிகிச்சை, சுகாதார சிகிச்சை, மருந்துச்சாலை, ஆயுர்வேத மருத்துவ சேவை நிலையத்தை பேணுதல், திண்மக்கழிவு முகாமைத்துவம், தொற்றுநோய், பரவுகின்ற நோய் என்பவற்றைக் கட்டுப்படுத்தல், நகரத்தை உருவாக்குதல், நகரத்திட்டங்களை அங்கீகரித்தல், வீதி வெளிச்சங்கள், தொழிற்சாலைகளிலிருந்து இடம்பெறுகின்ற சுற்றாடல் பாதிப்புக்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், பிள்ளைகள் மற்றும் முதியவர்களுக்கான நூல் நிலையச் சேவைகளைப் பேணுதல், பாலர் பாடசாலை, பகல் கண்காணிப்பு நிலையத்தை பராமரிப்பது மாத்திரமன்றி தகனச்சாலை மற்றும் மயானங்களைப் பேணுதல், நகரத்தை சுகாதாரமாகவும் கவர்ச்சியாகவும் பேணுகின்ற பொறுப்பு இச்சிறிய நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரத்தைப் போல நகரத்தில் குடியிருப்பவர்களின் வேண்டுதல்களின் காரணமாகவும் நல்லாட்சிதுவங்களுக்குப் புறம்பாகவும் செயற்படுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்கள் பொதுமக்களின் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்குத் தவறிய நிறுவனமாக பலரினால் இனங்காணப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பொதுமக்களுக்கு போதியளவு சேவைகளை வழங்குகின்ற வருமான வகையில் வருமான அடிப்படையுடன் உள்ளூராட்சி நிறுவன முறைமையினைக் கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மிகவும் இலகுபடுத்துதல் சந்தேகமற்றதாகும். அதற்காக மத்திய அரசாங்கத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற பெரிய அளவிலான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களை அத்தியவசியமான மற்றும் வெற்றிகரமான செயற்திட்டமாக மாற்றுவதும் அதன்மூலம் எதிர்ப்பார்த்த பிரதிபலன்களை பொதுமக்களுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் கிடைக்க செய்வதும் அத்தியவசியமான விடயம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்துகின்ற துறைசார்ந்த செயற்திட்டத்தை (புறனெகும) அமுல்படுத்தும் போது செயற்திட்ட முகாமைத்துவக்கோவையில் குறிப்பிட்ட வரையறைகளுக்கு இணங்க உப செயற்திட்டங்களைத் தெரிவுசெய்வதற்காக ஆய்வுகளை மேற்கொள்ளாது உப செயற்திட்டங்களைத் தெரிவுசெய்தல். செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயற்திட்டங்களின் நிதிசார் திட்டங்களை முகாமைத்துவம் செய்யும் நாளேட்டின் பிரகாரம் தயாரிக்காமை, பெறுகைத் தாமதங்கள், நிர்மாணங்களின் பொருத்தமற்ற தன்மைகள், நிர்மாணங்கள் பயன்படுத்தப்படாதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்படுகின்றமையைப் போல எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றாத பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றதைப் போல நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிர்மாணங்களை முடிவுறுத்தி செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாததன் காரணமாக செயற்திட்ட அலுவலகத்தைப் பேணுவதற்கும் ஆலோசனைக் கம்பனிகளுக்கு மேலதிக கொடுப்பனவுகளை செய்யவேண்டி ஏற்பட்டமையினையும் உள்ளடக்கிய விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

## 2. அறிமுகம்

-------------

### 2.1. பின்னணி

-----------

இலங்கையில் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்காக சலுகை வட்டி விகிதத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனமாகிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் பணத்தின் கீழ் உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பல செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றிற்கு மத்தியில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் 2011 ஒக்டோபர் 21 ஆந் திகதிய 2790 SRC(SF) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் மூலம் 07 மாகாண சபைகளின் 100 பிரதேச சபைகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக அமெரிக்க டொலர் 68.8 மில்லியன் அதாவது ரூபா 8,940 மில்லியனை பயன்படுத்துவதற்கும் அவற்றில் ரூபா 7,892 மில்லியனுக்குச் சமமான அமெரிக்க டொலர் 59 மில்லியனை ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியளிப்பதற்கும் இணங்கியிருந்தது. எவ்வாறாயினும் விசேட எடுப்பனவு உரிமைகளுக்கு (SDR) எதிராக அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர்கள் மீள்பெறுமதியிடப்பட்டதன் காரணமாக கடன் முகவராண்மை இணங்கிக்கொண்ட தொகை ரூபா 7892 மில்லியனுக்குச் சமமான ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 52.04 மில்லியனாக பின்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் ரூபாவின் பெறுமதி குறைக்கப்பட்டதன் காரணமாக அதிகரித்த ரூபா பெறுமதியுடன் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை 108 வரை அதிகரிக்கப்பட்டதுடன் 2015 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த செயற்திட்டம் 2017 யூன் 30 வரை 2 ஆண்டுகளால் நீடிக்கப்பட்டிருந்தது.

சலுகைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் வட்டியுடன் கடன் தவணைப் பணத்தை மீளச் செலுத்துதல் 2019 நவம்பர் 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன் மீளச் செலுத்துதலானது விசேட எடுப்பனவு உரிமைகள் (SDR) 768,708 இனைக் கொண்ட 48 அரையாண்டு தவணைப் பணங்களை உள்ளடக்கி இருக்கும். இறுதி தவணைப் பணம் 2043 மே 15 ஆந் திகதி செலுத்தப்பட வேண்டியதுடன் 2019 நவம்பர் 15 ஆந் திகதி செலுத்தப்பட்ட விசேட எடுப்பனவு உரிமைகள் (SDR) 768,708 தொகையான கடன் தவணைப் பணங்களை அண்ணளவாக அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர் 1.05 மில்லியன் அதாவது ரூபா 186.25 மில்லியனாகக் கணிக்கலாம்.

கடன் தவணைப் பணம் செலுத்தப்பட்ட சந்தர்ப்பம் வரை செயற்திட்டத்திடமிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதுபோகுமாகவிருந்தால் இக்கடன் பணம் அரசாங்கத்திற்கு ஒரு சுமையாக இருக்கும். அதற்கிணங்க கடன் தவணைப் பணத்தை மீளச் செலுத்துவதற்காக கடன் எடுக்க வேண்டி ஏற்படுவதனை தவிர்க்க முடியாதுள்ளது.

#### 2.1.1. செயற்திட்டத்தின் குறிக்கோள்

-------------------------------------------

உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் கணக்களிப்பொறுப்பு நிதி ரீதியாக மற்றும் தொழிநுட்ப ரீதியாக வலுவுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் ஆக்கபூர்வமான சேவையை வழங்குதல் பிரதான குறிக்கோளாகும். அதற்கிணங்க சுற்றாடல் ரீதியாக பொருளாதார ரீதியாக பொதுமக்கள் சுகாதார மற்றும் உள்ளூராட்சி வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களிலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**2.1.1.1. பஸ் நிறுத்துமிடங்களின் எதிர்ப்பார்த்த குறிக்கோள்**

(அ) பஸ் நிறுத்துமிடங்களுக்கு உள்வரும் பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்களிலிருந்து அறவிடப்படுகின்ற நிறுத்தி வைத்தல் கட்டணங்கள், கடைகளின் வாடகை, சுகாதார வசதிகளைப் பயன்படுத்துபவர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்கள் என்பவற்றின் மூலம் பிரதேச சபைக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளல்.

(ஆ) பயணிகள் பாதுகாப்பாக பஸ்களில் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் வசதிகளை வழங்குதல்.

(இ) பஸ்களை எதிர்பார்த்து இருக்கின்ற பயணிகளுக்கு வசதிகளை வழங்குதல்.

(ஈ) பயணிகளுக்கும் பிரதேசத்தில் நடமாடுகின்ற மக்களுக்குமான சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்.

(உ) பல்வேறு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேசத்தில் குடியிருப்பவர்களுக்கு செலவு செய்வதற்கு ஏற்படும் காலத்தைக் குறைத்தல்.

**2.1.1.2. நீர் வழங்கல் செயற்திட்டங்களிலிருந்து எதிர்ப்பார்கின்ற குறிக்கோள்கள்**

(அ) பொருத்தமான தரமான நிலைமையினைப் பரீட்சித்து சுத்தமான நீரை வழங்குவதன் மூலம் பிரதேசத்திலுள்ள மக்களின் சுகாதார நிலைமையை மேம்படுத்துதல் மற்றும் செலவுகளைக் குறைத்தல்.

(ஆ) ஒரு குடும்பத்திற்கு நீரை வழங்குவதற்காக மேற்கொள்ள வேண்டியுள்ள செலவுகளைக் குறைப்பதன் மூலம் பொருளாதார நிலைமையினை மேம்படுத்துதல்.

(இ) ஆண்டு முழுவதும் தீவிர குடிநீர் பற்றாக்குறைக்கு முகங்கொடுத்துள்ள மக்களுக்கு சுத்தமான நீரினை வழங்குதல்.

(ஈ) நீருக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களிலிருந்து பிரதேச சபைக்கு வருமானம் உழைக்கும் வழிகளை உருவாக்கிக்கொள்ளல்.

(உ) சிறுநீரக நோய் சார்ந்த பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு சுத்தமான நீரை வழங்குவதன் மூலம் அந்த நோயை குணப்படுத்துவதற்கான பரிகாரத்தை வழங்குதல்.

(ஊ) விவசாய உற்பத்திகளின் அளவினை அதிகரித்தல்.

**2.1.1.3. பல்நோக்கு கட்டிடங்களிலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள்**

(அ) பல சேவைகளை ஒரே இடத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு வசதிகளை வழங்குவதன் மூலம் பிரதேசத்திலுள்ள மக்களின் செலவுகளையும் காலத்தையும் குறைத்தல்.

(ஆ) வைத்திய சிகிச்சைகளின் மூலம் மக்களின் சுகாதார நிலைமையை அதிகரித்து அரசாங்கமும் மக்களும் மருத்துவ சிகிச்சைக்காக மேற்கொள்கின்ற செலவுகளைக் குறைத்தல்.

(இ) சிறுவர்களுக்காக பாதுகாப்பான பகல்நேர கண்காணிப்பு நிலையங்களைத் தோற்றுவித்தல் மற்றும் அதன்மூலம் பெற்றோர்கள் ஒரு பிள்ளைக்காக மேற்கொள்கின்ற மாதாந்த செலவினைக் குறைத்தல்.

(ஈ) பிரதேசத்திலுள்ள மக்களுக்கு விழாக்களை நடாத்துவதற்கான ஒரு இடத்தினை நியாயமான விலைக்கு வழங்குதல்.

(உ) கேட்போர் கூடம், கடைகளை உள்ளடக்கிய இடங்களை வாடகைக்கு வழங்குவதன் மூலம் பிரதேச சபை வருமானத்தினைப் பெற்றுக்கொள்ளல்.

(ஊ) பிரதேசத்திலுள்ள மக்களுக்கு நியாயமான விலைக்கு வசதிகளுடனான முன் பள்ளிச் சேவைகளை வழங்குதல்.

### 2.1.1.4. நூல் நிலையங்களிலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள்

(அ) பிரதேசத்திலுள்ள மக்களின் கல்வி அறிவினையும், வாசிக்கும் பழக்கத்தினையும் அதிகரித்தல்.

(ஆ) பிரதேசத்திலுள்ள மக்களுக்கு நூல் நிலையத்திற்கு பிரயாணம் செய்வதற்கு ஏற்படும் வருடாந்த செலவைக் குறைத்தல்.

(இ) நூல் நிலைய அங்கத்தவர்களிடமிருந்து கிடைக்கின்ற அங்கத்துவ கட்டணத்தின் மூலம் சபையின் வருடாந்த வருமானத்தை அதிகரித்தல்.

### 2.1.1.5. வாராந்த சந்தைகளிலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள்

(அ) பாவனையாளர்களுக்கு மிகவும் வசதியாக கொள்வனவு செய்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

(ஆ) பயணம் செய்யும் வியாபாரிகளுக்கு வியாபாரம் செய்வதற்காக தற்பொழுது காணப்படுகின்ற நிலைமையை விட வசதியான இடத்தை தயார்படுத்தல்.

(இ) வாராந்த சந்தைக்கு வருகை தருகின்ற வியாபாரிகளிடமிருந்து கட்டணத்தை அறவிட்டு அல்லது சந்தைக் காணியை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் பிரதேச சபையின் வருமான நிலைமையினை அதிகரித்தல்.

(ஈ) அதிக போட்டிகளின் மூலம் பாவனையாளர்களுக்கு நல்ல மற்றும் பசுமையான காய்கறி, பழங்கள், மீன் என்பவைகளை உள்ளடக்கிய பொருட்களைப் பெற்று செலவுகளைக் குறைப்பதற்கு வாய்ப்பளித்தல்.

(உ) அதிக வியாபாரத்தின் மூலம் வியாபாரச் சமூகத்தின் வருமான நிலைமையினை அதிகரித்தல்.

(ஊ) வாராந்த சந்தைக்கு வருகை தருகின்ற வியாபாரிகளுக்கும் பாவனையாளர்களுக்கும் உயர்மட்டத்திலான வியாபார வசதிகளை வழங்குதல்.

(எ) சுத்தமான மற்றும் கவர்ச்சியான சந்தை நிலத்தின் மூலம் நோய் பரவுவதனை குறைப்பதற்கு பங்களிப்புச் செய்தல்.

(ஏ) வாராந்த சந்தை நாட்களின் போது முறையற்ற வகையில் வீதியில் வியாபாரம் செய்வதன் காரணமாக ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசல்களைக் குறைத்தல்.

(ஐ) பிரதேசத்திலுள்ள விவசாயிகளின் உற்பத்திகளுக்கு போட்டி விலைகளை வழங்குவதன் மூலம் விவசாயிகளின் வருமான நிலைமையினை அதிகரித்தல்.

(ஒ) முறையற்ற சந்தை நிலத்தில் வியாபாரம் செய்வதன் மூலம் ஏற்படுகின்ற காய்கறி, பழங்கள் என்பன சேதமடைவதனைக் குறைத்தல்.

#### 2.1.1.6. உடல்நல மேம்பாட்டு நிலையத்திலிருந்து எதிர்ப்பார்க்கின்ற குறிக்கோள்கள்

(அ) பயணச் செயல்பாடுகளில் ஈடுபடுகின்ற பயணிகளுக்கு சுகாதாரமான உடல்நல மேம்பாட்டு வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் இடவசதிகளை வழங்குதல்.

(ஆ) நகரங்களில் கவர்ச்சியையும் மக்கள் வாழ்க்கையையும் மேம்படுத்தல்.

(இ) பிரதேச சபைகளுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளல்.

(ஈ) சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் நோய் பரவுவதைக் குறைத்தல்.

#### 2.1.1.7. தகனச்சாலையிலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோள்கள்

(அ) குறைந்த செலவில் உடலை எரிப்பதன் மூலம் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு பொருளாதார ரீதியாக நிவாரணத்தை வழங்குதல்.

(ஆ) அதிகாரப் பிரதேசத்திற்கு அப்பால் வசிப்பவர்களுக்கும் சேவையை வழங்குவதன் மூலம் பிரதேச சபைக்கு வருமானம் கிடைத்தல்.

(இ) இறந்த உடலை தகனம் செய்வதற்காக பாதுகாக்கப்பட்ட காடுகளிலிருந்து விறகுகள் கொண்டு வருவதனைக் குறைத்தல்.

### 2.1.2.மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கடமைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஒன்பதாவது பட்டியலில் காட்டப்பட்டுள்ள மாகாண சபைகள் பட்டியலின் 4 ஆவது பந்தியின் பிரகாரம் உள்ளூராட்சி மாகாண சபைகளின் ஒரு விடயமாகும். எவ்வாறாயினும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் சம்பந்தமாக அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் போல மேற்கூறிய அரசியலமைப்பின் சுருக்கிய பட்டியலில் காட்டப்பட்டுள்ளவாறு வெளிநாட்டு நடவடிக்கைகளானது மாகாண சபைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டதன் காரணமாக வெளிநாட்டுக் கடன்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கான நிறைவேற்று முகவராண்மை நிறுவனமாக செயற்படும் தேவைப்பாட்டினால் மத்திய அரசாங்கத்தின் ஒரு அமைச்சின் தேவைப்பாடு காணப்பட்டது.

சட்டத்தின் பிரகாரம் எது குறிப்பிடப்பட்டிருந்தாலும் தற்பொழுது மத்திய அரசாங்கத்தின் ஒரு அமைச்சாகிய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு நேரடியாக உள்ளூராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டங்களை அமுல்படுத்திவந்திருந்தது. அதற்காக உரிய உள்ளூராட்சி நிறுவனங்களின் சம்மதத்தைப் பெற்று அமுல்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 2.1.3.பிரதேச சபை

இலங்கையிலுள்ள உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு மத்தியில் சிறியவையான உள்ளுராட்சி நிறுவனமாகிய பிரதேச சபை 1987 இன் 15 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் 276 பிரதேச சபைகள் இன்று வரை செயற்படுகின்றன. இந்த உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு மத்தியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளுராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. அதன் மூலம் அந்த இரண்டு மாகாணங்களிலுள்ள உள்ளுராட்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் உள்ளுராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் துறைசார்ந்த செயற்திட்டத்தின் (புரனெகும) மூலம் வடக்கு மற்றும் கிழக்கினைத் தவிர்த்து ஏனைய ஏழு மாகாணங்களிலுள்ள உள்ளுராட்சி நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக 108 பிரதேச சபைகள் தெரிவுசெய்யப்பட்டன.

## 2.2. கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 3(1)(ஈ), 5(2), 12(ஏ) பிரிவின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் இச் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.3. தலைப்பினைத் தெரிவுசெய்யும் அடிப்படை

வெளிநாட்டுக் கடன் பணத்தைப் பயன்படுத்தி நிர்மாணங்களைப் பூர்த்திசெய்து உரிய உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு சொத்துக்களை ஒப்படைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் செயற்திட்ட காலம் முடிவடைந்ததோடு செயற்திட்ட அலுவலகம் மூடப்பட்டதனால் அச்செயற்திட்டம் தொடர்பாக கவனம் செலுத்தும் போது வெற்றியளிக்காத அல்லது அரைவாசி வெற்றியளிக்காத உப செயற்திட்டங்கள் காணப்படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க அச்செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த குறிக்கோள் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டுள்ளது, நிறைவேற்றப்படவில்லையாயின் அதற்கான காரணம் என்ன என்பதுவும் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்து பிரதிபலன்கள் கிடைக்கும் வழிகளுக்கு திரும்ப முடியுமா என்பதனையும் ஆய்வுசெய்து சிபாரிசுகள் சமர்ப்பிப்பது இத்தலைப்பினைத் தெரிவுசெய்வதற்கான அடிப்படையாகும்.

## 2.4. கணக்காய்வின் நோக்கெல்லை

என்னால் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 3000-3200) இணைந்த வகையில் எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கணக்காய்வின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட 2011 ஆகஸ்ட் மாத செயற்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டுக் கோவை, பெறுகை ஆலோசனைக் கோவை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் கம்பனியினால் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட சாத்திய வள ஆய்வு அறிக்கை என்பன அடிப்படையாகக் கொள்ளப்பட்டது.

### 2.5. இக்கணக்காய்வின் குறிக்கோள்

பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக மதிப்பீட்டினை மேற்கொள்ளல் இச்செயலாற்றல் கணக்காய்வின் குறிக்கோளாகும்.

i. இச்செயற்திட்டத்தின் கீழான நிர்மாணங்களிலிருந்து எதிர்ப்பார்த்த பொருளாதார மற்றும் சமூக பிரதிபலன்கள் கிடைத்துள்ளதா?

ii. தற்பொழுது கிடைக்கின்ற பிரதிபலன்கள் கிரயத்திற்கு நேரொத்த வகையில் போதியளவானதா?

iii. ஏதிர்ப்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு காணப்படுகின்ற தடைகள் என்ன?

iv. ஏதிர்ப்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக மேலும் மேம்படுத்தல்கள் அவசியமா? அதற்கான நிதி ஏற்பாட்டினை வழங்கக்கூடிய வழிகள் காணப்படுகின்றதா?

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1. திட்டமிடல்

#### 3.1.1. தொடக்க ஆய்வுகள்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் தலைமைத்துவத்தில் அமைச்சு உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழுவின் மூலம் செயற்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டுக் கோவையில் குறிப்பிட்ட வரையறைகளுக்கு இணங்க உப செயற்திட்டங்கள் தீர்மானிக்கப்பட்டன என்று கலந்துரையாடலின் போது தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அக்குழுவின் அங்கத்தவர்கள் தொடர்பான தகவல்களும் தெரிவுசெய்வதற்கு கருத்தில் கொள்ளப்பட்ட பிரேரனைகள் எவை என்பதுவும் அப்பிரேரனைகள் சமர்ப்பிக்கப்பட்டது யாரால் என்பதுவும் தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

மாகாண சபைகள் மட்டத்திலும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மட்டத்திலும் நீண்ட கால அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அல்லது தேவைப்பாட்டினை இனங்கண்டு முற்றுநிலை அடிப்படையில் பட்டியல்படுத்துதல் இடம்பெற்றிருந்தது என்பதற்கும் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

புரனெகும செயற்திட்டத்தின் உபசெயற்திட்டமாக தீர்மானிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களைத் திட்டமிடுவதற்கு தனியார் நிர்மாண ஆலோசனை நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டதுடன் அந்த ஆலோசனை நிறுவனத்தினால் பொருளாதார மீளாய்வு, சமூக மீளாய்வு, சுற்றாடல் மீளாய்வு என்பன தயாரிக்கப்பட்டன. இந்த ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு குழுவின் மூலம் தெரிவுசெய்யப்படுகின்ற எந்தவொரு செயற்திட்டத்தினையும் அமுல்படுத்தும் போது பொருளாதார ரீதியாக அல்லது சமூக ரீதியாகக் கிடைக்கின்ற பிரதிபலன்கள் போதியவையாக இல்லாததன் அடிப்படையில் நிராகரித்தலும் இடம்பெற்றிருக்கவில்லை.

### 3.1.2. கூட்டிணைந்த திட்டம்

செயற்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டுக் கோவையின் மூலம் செயற்திட்டத்தின் முழுமையான செயலாற்றல் தொடர்பாக தெளிவான ஒரு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில் உள்ளடக்கப்பட்ட அமுல்படுத்தல் திட்டத்தின் **(Implementation plan)** பிரகாரம்.

i. 2011 ஆம் ஆண்டிற்கான இறுதிக் காலாண்டின் போது உப செயற்திட்டங்களை இனங்காணல்.
ii. 2013 ஆம் ஆண்டிற்கான இறுதிக் காலாண்டிற்குள் பெறுகைகளையும் ஒப்பந்தம் வழங்குதல்களையும் முடிவுறுத்துதல்.
iii. 2014 ஆம் ஆண்டின் இறுதியளவில் அனைத்து நிர்மாண நடவடிக்கைகளையும் முடிவுறுத்த வேண்டியிருந்தது. (பின்னிணைப்பு 01 – overall protect implementation plan)

செயற்திட்டங்களை அமுல்படுத்தும் திட்டத்தின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அனைத்து செயற்திட்டங்களும் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 843.74 மில்லியன் பெறுமதியான 20 உப செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் 05 நாட்களிலிருந்து 377 நாட்கள் வரையான கால வீச்சுடைய தாமதத்துடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. (பின்னிணைப்பு 02)

பெறுகை நடைமுறைகளிலுள்ள தாமதங்கள் மற்றும் நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் தாமதங்கள் காரணமாக 2015 யூன் 30 இலிருந்து 2017 யூன் 30 வரை செயற்திட்ட காலத்தை நீடிக்க வேண்டியிருந்தது.

### 3.1.3. செயல் நடவடிக்கைத் திட்டம்

செயற்திட்ட அலுவலகத்தால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் செயற்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டுக் கோவையின் மூலம் காலப்பகுதியுடன் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டத்தை அமுல்படுத்தும் திட்டத்திற்கு இணங்கும் வகையில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.1.4. நிதித்திட்டம்


செயற்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டுக் கோவையின் IV ஆவது அத்தியாயத்தில் கிரயம் மற்றும் நிதி பந்திகளின் மூலம் முழுமையான செயற்திட்டங்களுக்காகவும் நிதித்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. (பின்னிணைப்பு 03)

செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டதன் காரணமாக செயற்திட்ட பதவியணியினர்களுக்குச் சம்பளம் செலுத்துதல், அலுவலகச் செலவுகள், கால அடிப்படையில் செயற்திட்ட நிர்மாணங்களை மேற்பார்வை செய்யும் ஆலோசனைக் கம்பனிகளுக்கான கொடுப்பனவுகள் என்பவைகளை உள்ளடக்கிய மேலதிக செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

## 3.2. செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

### 3.2.1. செயற்திட்டங்கள் மற்றும் உப செயற்திட்டங்களை ஆரம்பித்தலில் தாமதம்


2011 ஒக்டோபர் 21 ஆந் திகதி செயற்திட்ட உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தும் 08 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2012 யூலை மாதத்தில் செயற்திட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆரம்பித்தல் தாமதத்தினைத் தவிர்த்து செயற்திட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு பதிலாக உப செயற்திட்ட பெறுகை நடவடிக்கை மற்றும் நிர்மாண வேலைகளை ஆரம்பித்தலும் தாமதமடைந்திருந்தது. இச்செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றும் செயல்முன்னேற்றம் வெற்றிகரமான மட்டத்தில் இல்லாதிருந்ததுடன் ஒட்டுமொத்த பெறுகையானது 2014 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தும் அச்செயற்பாடு 2016 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரை தாமதமடைந்து காணப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.




### 3.2.2. உப செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதங்கள்

பெறுகைகளின் பின்னர் நிர்மாண ஒப்பந்தங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் வேலைகளை முடிவுறுத்தி ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் நிர்மாண வேலைகளின் தாமதங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக செயற்திட்ட அலுவலகத்தினால் போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 2012, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் முறையே நிர்ணயிக்கப்பட்ட காலாண்டுகளில் 1, 35 மற்றும் 122 உப செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட வேண்டியருந்த போதிலும் பூர்த்திசெய்யும் போது 1, 14 மற்றும் 55 உப செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகளைப் பூர்த்திசெய்தல் தாமதமடைந்திருந்தன.

| தொடர் இலக்கம் | காலாண்டு | வேலைகள் முடிவுறுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்களின் எண்ணிக்கை | வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை | வித்தியாசம் |
|---|---|---|---|---|
| ------ | ----------- | -------------- | ------------ | -------- |
| 1 | 2012 I | 1 | 0 | (1) |
| 2 | 2014 I | 3 | 2 | (1) |
| 3 | 2014 II | 8 | 3 | (5) |
| 4 | 2014 III | 7 | 5 | (2) |
| 5 | 2014 IV | 17 | 11 | (6) |
| 6 | 2015 I | 30 | 16 | (14) |
| 7 | 2015 II | 41 | 12 | (29) |
| 8 | 2015 III | 33 | 21 | (12) |
| 9 | 2015 IV | 18 | 25 | 7 |
| 10 | 2016 I | 7 | 22 | 15 |
| 11 | 2016 II | 4 | 16 | 12 |
| 12 | 2016 III | 2 | 13 | 11 |
| 13 | 2016 IV | 6 | 11 | 5 |
| 14 | 2017 I | 0 | 12 | 12 |
| 15 | 2017 II | 0 | 7 | 7 |
| 16 | 2018 I | 0 | 1 | 1 |




### 3.2.3.உப செயற்திட்டங்களை திட்டமிடலும் நிர்மாண வேலைகளின் பொருத்தத் தன்மையும்

---

கணக்காய்வுத் தெரிவுசெய்வையின் போது உப செயற்திட்டங்களின் திட்டங்களிலும் நிர்மாண வேலைகளிலும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. அதன் காரணமாக அந்த நிர்மாண வேலைகள் நிலைத்திருப்பதற்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்ததுடன் பராமரிப்புச் செலவுகள் அதிகரித்துச் செல்லலாம் என்பதுவும் அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

(அ) **மாவதகம பஸ்தரிப்பிடம்**

---

i. அரைவாசி பூர்த்திசெய்யப்பட்ட பஸ்தரிப்பிடக் கட்டிடத்தின் இரும்பு கட்டமைப்பின் மீது அமைந்துள்ள கொங்கிரீட் தளத்தினூடாக நீர் கசிவதனைத் தவிர்ப்பதற்காக நீர்ப் பாதுகாப்பு பரிகாரம் (water proofing) ஏற்படுத்தப்படாததனால் நீர் கசிந்து செல்வதன் மூலம் இரும்பு துருப்பிடிப்பதற்கு உள்ளாகியிருந்தது.

ii. மலசலகூடங்களுக்கு சுத்தமான நீர் வழங்கப்படாதிருந்ததுடன் பயன்படுத்தப்பட்ட அசுத்தமான நீரின் காரணமாக பொருத்தப்பட்டிருந்த சென்சர் (sensor) செயற்படாதிருந்ததுடன் மலசலகூட கொமட்டும் கழுவுகின்ற பேசன்கள் (சின்க்) அனைத்தும் கறைபிடித்திருந்தன.



(ஆ) **ரெமுன நீர்த்திட்டம்**

-----------------------------------

நீர் அற்ற உயர் நிலப்பகுதியில் அமைந்துள்ள ரெமுன கிராமத்தில் குடியிருக்கும் 72 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற நீரை மலை உச்சியில் அமைந்துள்ள பகிர்ந்தளிக்கும் தாங்கிக்கு பாய்ச்சுவதற்கு மூன்று வழி மின்சார வழங்கலின் மூலம் செயற்படுகின்ற மோட்டார் பொருத்தப்பட்டிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள மூன்று வழி மின்சார இணைப்புக்களிலிருந்து போதியளவு மூன்று வழி மின்சாரம் அந்நிலையத்திற்கு கிடைக்காததனால் போதியளவு நீர் வழங்கலினை வழங்குவதற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) **உடபலாத நீர்த்திட்டம்**

--------------------------------

இயற்கையான நீர் வழிகளைப் பயன்படுத்தி மூன்று கட்டங்களின் கீழ் ரூபா 183.54 மில்லியன் செலவில் இந்த நீர்ச் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் நிர்மாணத்தின் போது இடம்பெற்ற குறைபாடுகளை சரிசெய்யாது 2018 சனவரி 11 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.



i. இந்த நீர் செயற்திட்டத்திற்காக நீரைப் பெற்றுக்கொள்ளும் இடத்திற்கு மணல் ஒன்றுசேர்கின்றது என செயற்திட்டத்தைப் பூர்த்திசெய்து ஒப்படைப்பதற்கு முன்னர் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் அச்சிக்கலுக்கான பரிகாரத்தை மேற்கொள்வதற்கும் வில்கமுவ மற்றும் உடுதும்புர ஆகிய நீர் செயற்திட்டங்களிலுள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் (மேலதிக நிதி ஏற்பாடு) செயற்திட்டத்தின் கீழ் ரூபா 102.29 மில்லியன் தொகையான ஒப்பந்தத்திற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

ii. நீரைப் பெற்றுக்கொள்ளும் இடத்திற்கு மேலே தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான சுத்திகரித்தல் மற்றும் பகிர்ந்தளித்தல்

நிலையம் காணப்படுவதுடன் அந்த நீர் வழங்கல் முறைமையினை மேம்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) **வெலிவிடிய திவுதுர பிரதேச சபைக் கட்டிடத்தில் மின்சார படிக்கட்டுக்களைப் பொருத்துதல்**

---

ரூபா 3.5 மில்லியன் செலவு செய்து பொருத்தப்பட்ட மின்சார படிக்கட்டுக்கள் 2017 மார்ச் 08 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மின்சாரப் படிக்கட்டுக்களில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக செயற்படாதிருந்தது.

1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 23 மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் தயாரிக்கப்பட்டு 2006 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 1467/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிரமாணங்கள் 5(8)(a) இலிருந்து (i) வரையான பணிப்புரைகளின் மூலம் மின்சாரப் படிக்கட்டுக்களை நிர்மாணிக்கும் போது ஊனமுற்ற ஒரு நபர் மின்சாரப் படிக்கட்டில் பயணம் செய்யும் சந்தர்ப்பத்தில் அவருக்கு/அவளுக்கு இலகுவாக பயணம் செய்யக்கூடிய வகையில் இருக்க வேண்டிய அத்தியவசியமான விபரக் குறிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் இந்த விபரக் குறிப்புக்கள் எவற்றிற்கும் இணக்கமற்ற வகையில் இந்த மின்சாரப் படிக்கட்டுக்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன் அது பற்றி ஆகக் குறைந்தது சக்கர நாற்காலி படிக்கட்டில் உள்வருவதற்கேனும் முடியாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த மின்சார படிக்கட்டிலுள்ள குறைபாடுகளைச் சரிசெய்யுமாறு 2017 மார்ச் 14 ஆந் திகதியிலிருந்து பிரதேச சபையின் செயலாளரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் செயற்திட்ட அலுவலகத்தினால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.


## 3.3. செயற்திட்டத்தின் செயலாற்றல்

---

### 3.3.1. நிதி செயலாற்றல்

---

2012 யூலை 01 ஆந் திகதி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் 2015 யூலை 30 ஆந் திகதியளவில் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2017 யூன் 30 ஆந் திகதி செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமெரிக்க டொலர் 52.77 மில்லியன் பின்வருமாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.



**3.3.2.பௌதீக செயலாற்றல்**

செயற்திட்டத்தின் குறிக்கோள்களுக்கு இணங்க நிர்வாகக் கட்டிடத்தினை நிர்மாணித்தல் மற்றும உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏனைய சமூக உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்தும் குறிக்கோளாகத் தெரிவுசெய்யப்பட்ட 108 உள்ளூராட்சி நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| நிர்மாணத்தின் தன்மை | தொடர்புபட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை | உப செயற்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| நிருவாகக் கட்டிடம் | 39 | 40 |
| உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் | 21 | 21 |
| சுமூக வசதிகளை மேம்படுத்தல் | 80 | 89 |
| நீர் வழங்கல் செயற்திட்டங்கள் | 18 | 25 |
| ஏனையவை | 03 | 03 |
| | | 178 |

**3.3.2.1. பயன்படுத்தப்படாத உப செயற்திட்டங்கள்**

இச்செயற்திட்டத்தின் கீழ் ரூபா 332.19 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 04 பஸ்தரிப்பிடங்கள், 04 நீர் வழங்கல் செயற்திட்டங்கள், 02 பல்நோக்கு கட்டிடங்கள், 03 உடல்நல நிலையங்கள் என்பன உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் முழுமையாக விளைவற்றுக் காணப்பட்ட அச்செயற்திட்டங்கள் பின்வருமாறாகும். அந்நிர்மாணச் செயற்திட்டங்கள் தொடர்பான விபரமான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | உப செயற்திட்டம் | செலவு ரூபா மில்லியன் |
|---|---|---|
| 1 | வண்ணாத்திவில்லு நீர்த் திட்டம் | 57.97 |
| 2 | வில்கமுவ நீர்த் திட்டம் | 57.19 |
| 3 | மதுராவெவ பிரதேச சபையின் திக்லந்த நீர்த் திட்டம் | 26.83 |
| 4 | மஹவ பொல்பிதிகம நீர்த் திட்டம் | 14.62 |
| 5 | ரிதிகம பஸ்தரிப்பிடம் | 43.49 |
| 6 | மீகஹதிவுல பஸ்தரிப்பிடம் | 33.51 |
| 7 | கிரம பஸ்தரிப்பிடம் | 31.11 |
| 8 | லங்காபுர பஸ்தரிப்பிடம் | 11.33 |

| | | |
|---|---|---|
| 9 | இம்புல்பே பல்நோக்கு கட்டிடம் | 34.08 |
| 10 | ஹல்துமுல்ல பல்நோக்கு கட்டிடம் | 12.46 |
| 11 | இபலோபம,பலாகல,திரப்பன உடல்நல நிலையம் | 9.60 |
| | **மொத்தம்** | **332.19** |

(அ) **வண்ணாத்தி வில்லு நீர்த்திட்டம்**

ரூபா 57.94 மில்லியன் செலவு செய்து பூர்த்திசெய்யப்பட்டு 2017 யூன் 30 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த இந்த நீர்த்திட்டத்திற்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற நீரை நிலத்தடி தாங்கியில் (reserve) சேகரித்து பாவனையாளர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆதன்மூலம் கங்கேவாடிய பிரதேசத்திலுள்ள 80 குடும்பங்களுக்கு $24m^3$அளவும் கடற்படை முகாமுக்கு $38m^3$அளவும் புதிய எலுவன்குளம் பழைய எலுவன்குளம் மற்றும் இறால் மடு ஆகிய 03 கிராமங்களிலுள்ள 670 குடும்பங்களுக்கு $450m^3$அளவுமாக $512m^3$அளவு நீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

இன்றுவரை நீர் இணைப்புக்களை வழங்குவதற்காக ரூபா 8.2 மில்லியன் மேலதிக மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டு நீர்க்குழாய் துணைக் கருவிகள் மற்றும் காண் வெட்டுதல், குழாய் பதித்தல் என்பவைகளை உள்ளடக்கிய செயற்பாடுகளுக்காக நீர் வழங்கல் சபையினால் பெரு நகர் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சிடமிருந்து 2019 ஆம் ஆண்டின் போது பணம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் ஒரு அலகு நீரினை வெட் வரியினையும் சேவைக் கட்டணத்தையும் சேர்த்து ரூபா 18 இற்கு பிரதேச சபைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் பிரதேச சபையினால் சபையின் பராமரிப்பு மற்றும் ஏனைய சேவைக் கட்டணங்களையும் சேர்த்ததன் பின்னர் ஒரு அலகு நீரினை ரூபா 35 இனை விட கூடிய விலைக்கு பாவனையாளர்களுக்கு விற்க வேண்டி ஏற்பட்டதனால் நீரினைப் பகிர்ந்தளித்தல் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. நீர் வழங்கல் செயற்திட்டத்தை அமுல்படுத்தாதிருந்ததன் காரணமாக நீர் இணைப்பினை எதிர்ப்பார்த்திருந்த பொதுமக்கள் ஆண்டு முழுவதும் தீவிர நீர்த்தட்டுப்பாட்டிற்கு உள்ளாகியிருந்தது என்பது.

ii. பிரதேசத்திலுள்ள பொதுமக்களின் சுகாதாரச் செலவை ரூபா 2.25 மில்லியனால் குறைப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக அந்த எதிர்ப்பார்ப்பு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது.

iii. நீரினை வழங்குவதற்கு மேற்கொள்ள வேண்டியிருந்த செலவை ரூபா 2.21 மில்லியனால் குறைப்பதன் மூலம் பொதுமக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் அக்குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது.

iv. சிறுநீரக நோயைத் தடுப்பதற்கான பரிகாரத்தினை வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் அதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது.

v. பிரதேச சபைக்கு நீரை வழங்குவதன் மூலம் ரூபா 1.4 மில்லியன் இலாபம் உழைப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் அதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது.

(ஆ) **வில்கமுவ நீர்த்திட்டம்**

---------------------------------------

வில்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் குடிநீர்த் திட்டத்தை நிர்ணயிப்பதற்காக ரூபா 57.19 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்டு 2017 யூன் 30 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் கீழ் கிணற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற நீரை சுத்திகரித்ததன் பின்னர் நிலத்தடி தாங்கியில் களஞ்சியப்படுத்தி அத்தாங்கியிலிருந்து மலை உச்சியில் அமைக்கப்பட்ட பழைய பகிர்ந்தளிக்கும் தாங்கிக்கு பாய்ச்சி பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

i. மத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பிரதேசமாக இருந்தும் வட கிழக்கு பருவத்தின் போது வழக்கமாக உலர் வலயத்திற்கு கிடைக்கின்ற அளவிலான மழைவீழ்ச்சியைக் கொண்டிருப்பதனால் ஆண்டில் அதிக காலம் குளங்களும் கால்வாய்களும் வற்றிச் செல்வது தொடர்பாக சாத்திய வள ஆய்வின் போது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

ii. நிர்மாணிக்கப்பட்ட கிணற்றில் ஆண்டில் அதிக அளவான காலம் நீர் இல்லாமல் போவதனால் எதிர்பார்த்துள்ள 500 குடும்பங்களுக்கு நீரை வழங்குவதற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

iii. செயற்திட்டத்திற்காக எதிர்பார்த்த பணத்தில் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு அல்லது பிரதேச சபைக்கு எதுவித பொருளாதார அல்லது சமூக ரீதியான நலன்கள் கிடைக்காமையினால் இச்செயற்திட்டத்திற்காக விளைவற்ற செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. கிணற்றிலிருந்து எதிர்ப்பார்த்த நீர் மட்டத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக மேலும் செய்ய வேண்டிய மேம்படுத்தல்கள் தொடர்பாக எதுவித தொழிநுட்ப ரீதியான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) **மதுராவல பிரதேச சபை – ரெமுன மற்றும் திக்லந்த நீர்த்திட்டம்**

---------------------------------------------------------------------------------------

மதுராவல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள திக்லந்த கிராமத்திலுள்ள 25 குடும்பங்களுக்கும் ரெமுன கிராமத்திலுள்ள 150 குடும்பங்களுக்கும் ஒரு நாளுக்கு $60m^3$குடி நீரை வழங்குவதற்காக ரூபா 26.83 மில்லியன் செலவில் இரண்டு நீர்த்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. இச்செயற்திட்டம் 2016 செப்தெம்பர் 15 ஆந் திகதியில் வேலையை முடிவுறுத்தி 2016 ஒக்டோபர் 10 ஆந் திகதி பிரதேச சபையிடம் ஒப்படைத்திருந்தது.

i. திக்லந்த நீர்த்திட்டத்திற்கு நீரைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதேச சபைக்குச் சொந்தமான பொதுக் கிணறு மேம்படுத்தப்பட்டிருந்ததுடன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது அந்த நீரில் பெக்டீரியா வளருதல் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. பொதுக் கிணறு அமைந்துள்ள இடத்திற்கு மிகவும் அருகாமையில் அமைந்துள்ள வீடு மற்றும் மலசலகூடங்களின் மூலம் கிணற்று நீருக்கு கழிவு நீர் ஒன்றுசேர்கின்றதா என்பது தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தியிருக்காததனால் கிணற்றை அபிவிருத்தி செய்தல், குழாய்கள் அமைத்தல், நீர்த் தாங்கிகளைப் பொருத்துதல், பகிர்ந்தளித்தலைப் போல நீர் மீற்றர்களைப் பொருத்துவதற்கான முழுச் செலவும் விளைவற்றதாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

ii. நீர்ப்பட்டியல்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வருமானத்திலிருந்து அனைத்து செலவுகளையும் தீர்த்ததன் பின்னர் பிரதேச சபைக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் அவ்வாறான வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) **மஹவ பொல்பிதிகம நீர் வழங்கல் முறைமை**

---

சிறுநீரக நோய் காணப்படுகின்ற பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ள மஹவ பிரதேச சபையின் பிரதேசத்திற்கும் பொல்பிதிகம பிரதேச சபையின் பிரதேசத்திற்கும் குடிநீரை மாத்திரம் வழங்குவதற்காக பொலிமர் தாங்கியினை நிறுவுவதற்கு ரூபா 14.62 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.





i. சிறுநீரக நோயாளர்கள் இருக்கின்ற பிரதேசமான பொல்பிதிகம பிரதேசத்தில் 1800 குடும்பங்களுக்குத் தேவையான குடிநீரை வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் நீரை வழங்குவதற்கு முடியாமையால் எதிர்ப்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

ii. பிரதேசம் முழுவதும் நிறுவப்பட்டுள்ள பொலிமர் நீர்த் தாங்கிகள் 2017 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டதன் காரணமாக உடைந்து போகின்ற மற்றும் மிருகங்களால் சேதப்படுத்தப்படுகின்ற ஆபத்துக்கு உள்ளாகியிருந்தது.

iii. செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது ரூபா 7.78 மில்லியன் வருடாந்த வருமானம் பிரதேச சபைக்கு பெற்றுக்கொள்ளலாம் என்று எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் எதுவித

வருமானமும் சபையினால் பெற்றக்கொள்ள முடியாதிருந்தது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

iv. கோன்வெவவில் அமைந்துள்ள நீர் வழங்கல் நிலையத்திலிருந்து 35 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பொல்பிதிகம நீர்த் தாங்கிக்கு நீரை வழங்குவதற்காக தேவையான லொறி பவுசரினை செயற்திட்டத்தின் மூலம் வழங்குதல் இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்காமையும் இச்செயற்திட்டம் செயற்படாமலிருப்பதற்கு காரணமாக இருந்தது.

(உ) **ரிதிகம பஸ்தரிப்பிடம்**

---------------------------------------

ரூபா 43.49 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த இக்கட்டிடத்தின் தளமாடி பஸ்தரிப்பிடத்திற்காகவும் முதலாம் மாடி ஆயுர்வேதம் மற்றும் மேற்கத்திய மருத்துவ சிகிச்சை, முன் பள்ளி, உணவுச்சாலை, வாசிகசாலை என்பவற்றிற்காகவும், இரண்டாம் மாடி கருத்தரங்கு மண்டபத்திற்காகவும் ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2017 மார்ச் 29 ஆந் திகதி ரிதிகம பிரதேச சபைக்கு செயற்திட்டம் ஒப்படைக்கப்பட்டிருந்தும் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்துள்ள தளமாடியும் முதலாம் மாடியும் 2019 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரையும் எதிர்ப்பார்த்த குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக பொதுமக்களுக்கு திறக்கப்பட்டிருக்கவில்லை.



i. பஸ்களுக்காக காத்துக்கொண்டிருக்கும் பயணிகளுக்கு ஆசனங்களில் இருப்பதற்கும் பாதுகாப்பாக காத்திருப்பதற்குமாகத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

ii. பஸ்தரிப்பிடத்தை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாததன் காரணமாக பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய சேவையைப் போல பிரதேச சபைக்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 5.3 மில்லியன் வருமானம் வருடாந்தம் இழக்கப்பட்டிருந்தது.

iii. பிரதேசத்திலுள்ள மக்களின் சுகாதார நிலைமையை உயர்த்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் சுகாதார சிகிச்சை நடாத்தப்படாததன் காரணமாக அக்குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் பிரதேச மக்களுக்கு சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏனைய நகரங்களுக்கு செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளதனால் அதற்காக எடுக்கின்ற காலத்தைப் போல செலவினையும் குறைப்பதற்கு முடியாதிருந்தது.

iv. கட்டிடத்தில் முதலாம் மாடியில் ஆயுர்வேத மருத்துவ சிகிச்சைக்காக இடவசதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் பஸ்தரிப்பிடத்திற்கு அண்மையில் ஆயுர்வேதத்

திணைக்களத்திற்குச் சொந்தமான ஆயுர்வேத வைத்தியசாலை காணப்படுவதனால் ஆயுர்வேத சிகிச்சைத் தேவைப்பாடு காணப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஊ) **மீகஹகிவுல பஸ் நிறுத்துமிடம்**

-------------------------------------------------------

இந்த பஸ் நிறுத்துமிடத்தையும் நுழைவு வீதியினையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 33.51 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் நிர்மாணங்கள் முடிவுறுத்தப்பட்டு 2017 ஏப்ரல் 24 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.





i. இந்த பஸ் தரிப்பிடத்தினை நிர்மாணிப்பதற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய பொருளாதார மற்றும் சமூக சாத்திய வள ஆய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததனால் இச்செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த குறிக்கோள் எவை என்பதனை கணக்காய்வில் இனங்காண முடியாதிருந்தது.
ii. மீகஹகிவுல நகரத்தினூடாக பயணிக்கின்ற பிரதான வீதியான பதுளை – மஹியங்கனை வீதியிலிருந்து வெளியேறும் பிரதேசத்தில் நுழைவு வீதி இல்லாதும் நுழைவு வீதிக்கான காணியை பொறுப்பேற்காதும் பஸ்தரிப்பிடத்தை நிர்மாணித்ததனால் கட்டிடத்தை பிரதேச சபைக்கு ஒப்படைத்த 2017 ஏப்ரல் 24 ஆந் திகதியிலிருந்து இன்று வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
iii. நுழைவு வீதியை நிர்மாணிப்பதற்காக சபையிடம் நிதி ஏற்பாடு இல்லாதிருந்ததாலும் கணக்காய்வு செய்த திகதி வரை வெளித்தரப்பினர்களிடமிருந்து நிதி ஏற்பாடு வழங்கியிருக்காததனாலும் பஸ்தரிப்பிடத்தினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளல் நிச்சயமற்றுக் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.
iv. பஸ்தரிப்பிடத்தினை திறக்காததன் காரணமாக வீதியில் இருபக்கத்திலும் பஸ்ஸினை நிறுத்தி வைப்பதற்கு ஏற்பட்டிருந்ததனால் வீதிக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.
v. உத்தேச கடைகளை குத்தகைக்கு வழங்க முடியாமையினால் எதிர்பார்த்த வருமானத்தை சபை இழந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.
vi. இந்த பஸ்தரிப்பிடத்தினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாமையினால் பஸ்தரிப்பிடத்திலிருந்து பயணத்தை ஆரம்பிப்பதற்கும் பஸ்தரிப்பிடத்தினூடாக பயணிப்பதற்கு உத்தேசித்துள்ள பயண இடங்களுக்காக பஸ்ஸிற்கு காத்திருக்கும் பயணிகள் பாதுகாப்பாக இருப்பதற்கு ஒரு இடம் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(எ) **கிரம பஸ்தரிப்பிடம்**

----------------------------------

ரூபா 31.11 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடத்தின் தளமாடி பஸ்தரிப்பிடத்தினையும் 05 கடைகளையும் மற்றும் மேல்மாடி ஒரு மண்டபத்தினையும் உள்ளடக்கியிருந்ததுடன் 2016 மார்ச் 23 ஆந் திகதி நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு

பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் 2018 சனவரி 02 ஆந் திகதி பொதுமக்களுக்காக திறந்துவைக்கப்பட்டிருந்தது.



i. இந்த பஸ்தரிப்பிடத்தினை நிர்மாணிப்பதற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய பொருளாதார மற்றும் சமூக ரீதியான சாத்திய வள ஆய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பக்கப்படாததனால் இச்செயற்திட்டத்தினால் எதிர்பார்த்த குறிக்கோள்கள் என்ன என்பதனை கணக்காய்வில் இனங்காண முடியாதிருந்தது.

ii. கடுவன பிரதேச சபைக்குரிய கிராமப் பிரதேசமான கிரம பிரதேசத்திற்காக இரண்டு மாடிக் கட்டிடத்தினைக் கொண்ட ஒரு பஸ் தரிப்பிடத்தின் தேவைப்பாடு இல்லாதிருந்ததுடன் பஸ் நிறுத்துமிடத்தின் (Bus halt) தேவைப்பாடு மாத்திரம் காணப்பட்டது என்பது களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

iii. இரண்டு மாடிக் கட்டிடத்தினைக் கொண்ட பஸ்தரிப்பிடத்தின் மேல்மாடி என்ன நோக்கத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்தது என்று தெளிவற்றிருந்ததுடன் நிர்மாணங்களைப் பூர்த்திசெய்து ஒப்படைத்த 2016 மார்ச் 23 ஆந் திகதி இலிருந்து எதுவித செய்றபாட்டிற்காகவும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iv. தளமாடியினை குத்தகைக்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட 05 கடைகள் குத்தகைக்கு வழங்கப்படாது பஸ்தரிப்பிடத்திற்கு அருகாமையில் திட்டமிடப்படாது கடையை நிர்மாணிப்பதற்கு பிரதேசத்திலுள்ள நபருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

v. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான ஒரு காணியில் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் நிர்மாணிப்பதற்கு முன்னர் காணியின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அல்லது காணியின் உரிமையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் இன்று வரை ரூபா 27.5 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதி பிரதேச சபையிடம் வேண்டப்பட்டிருந்தது.

vi. நிர்மாணம் முழுவதும் விளைவற்றுக் காணப்பட்டதனால் அனைத்து மின்பொருத்திகளும் கழற்றி எடுக்கப்பட்டிருந்ததுடன் கவர்ச்சிக்காக நிர்மாணிக்கப்பட்ட மின்சாரத் தூண் துருப்பிடித்திருந்ததன் காரணமாக உடைந்து விழுந்து அழிவடைந்து காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஏ) **லங்காபுர பஸ்தரிப்பிடம்**

------------------------------------------

ரூபா 11.33 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட இந்த பஸ்தரிப்பிடம் 2016 ஒக்டோபர் 03 ஆந் திகதி நிர்மாணம் முடிவுறுத்தப்பட்டு பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2017 பெப்ரவரி 08 ஆந் திகதி பொதுமக்களுக்காக திறக்கப்பட்டிருந்தது.



2017 பெப்ரவரி 08 ஆந் திகதி பஸ்தரிப்பிடம் பொதுமக்களுக்காக திறக்கப்பட்டிருந்தும் பஸ்கள் வருகை தராமையின் காரணமாக 2019 ஒக்டோபர் 30 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) **இம்புல்பே பல்நோக்கு கட்டிடம்**

-------------------------------------------------------

நூல் நிலையம், முன்பள்ளி சுகாதார நிலையம், ஆயுர்வேத நிலையம், கர்ப்பிணித்தாய் சிகிச்சை என்பவற்றிற்காக ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 34.08 மில்லியன் செலவில் 2016 செப்தெம்பர் 25 ஆந் திகதி நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்ட இப்பல்நேர்கது கட்டிடம் மற்றும் உள்ளக வீதிகள் 2017 சனவரி 03 ஆந் திகதி பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறக்கப்பட்டிருந்தது.

பிரதான வீதியிலிருந்து 02 கிலோமீற்றர் அளவான தூரத்தில் பொதுப் போக்குவரத்து சேவைகள் அற்ற ஒரு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இக்கட்டிடத்திலிருந்து இன்று வரை எதுவித பயன்பாடும் பெற்றுக்கொள்ளப்பட்ருக்கவில்லை. மிகவும் கவர்ச்சிகரமான சுற்றாடலில் அமைந்துள்ள கட்டிடத்தில் விழா மண்டபம் மற்றும் ஹோட்டல் வியாபாரம் என்பவற்றிற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு பிரதேச சபையினால் கடந்த காலப்பகுதியில் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டிருந்தும் இச்செயற்திட்டத்தின் மூலம் சமூக நலனோ அல்லது பிரதேச சபையின் வருமான அதிகரிப்போ இடம்பெற்றிருக்காததனால் விளைவற்ற நிர்மாணம் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஒ) **ஹல்துமுல்ல பல்நோக்கு கட்டிடம்**

------------------------------------------------------------

கேட்போர் கூடம், ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை நிலையம், சிறுவர் மற்றும் தாய்மார் சிகிச்சை நிலையம் என்பவற்றை நடாத்துவதற்காகத் திட்டமிடப்பட்டு ரூபா 12.46 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடம் 2014 நவம்பர் 25 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

i. சிறுவர் மற்றும் தாய்மார் சிகிச்சையின் மூலம் ஒரு ஆண்டிற்கு 200 தாய்மார்களுக்கும் 150 சிறுவர்களுக்கும் ஆயுர்வேத சிகிச்சையின் மூலம் ஒரு ஆண்டிற்கு 1200 நபர்களுக்கும் சேவைகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படக்கூடிய வருடாந்த பிரதிபலன்கள் ரூபா 710,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் சிறுவர் மற்றும் தாய்மார் சிகிச்சை நடாத்தப்பட்டிருக்காததனால் எதிர்ப்பார்த்த பிரதிபலன்கள் கிடைத்திருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

ii. விழா மண்டபத்தினை திருமண வைபவங்களுக்காக வாடகைக்கு வழங்குவதன் மூலமும் சுற்றுலா பயணிகளுக்காக அறைகளை வாடகைக்கு வழங்குவதன் மூலமும் ரூபா 780,000 வருடாந்த வருமானம் எதிர்ப்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2019 ஒக்டோபர் 30 ஆந் திகதி வரை விழா மண்டபத்தை வாடகைக்கு வழங்கி ரூபா 15,238 வாடகை வருமானம் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

iii. எதிர்பார்த்த வருமான இலக்குகளும் பிரதிபலன்களும் கிடைத்திருக்காததனால் இக்கட்டிடம் விளைவற்ற நிர்மாணம் என அவதானிக்கப்பட்டது.

(ஓ) **இபலோகம, பலாகல, திரப்பன உடல்நல நிலையங்கள்**

ரூபா 9.60 மில்லியன் செலவு செய்து இபலோகம, பலாகல மற்றும் திரப்பன உடல்நல நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றிற்கு மத்தியில் இபலோகம உடல்நல நிலையத்திற்கு நீர் இல்லாததனால் விளைவற்றுக் காணப்பட்டதுடன் பலாகல பிரதேச சபைக்குரிய ஆண்டியாகல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட உடல்நல நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு போதியளவு வேண்டுதல் இல்லாததனால் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.3.2.2. குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்ட உப செயற்திட்டங்கள்**

ரூபா 513.73 மில்லியன் செலவில் நிர்மாணக்கப்பட்ட 12 பல்நோக்கு கட்டிடங்களும் ரூபா 18.90 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நூல் நிலையமும் ரூபா 105.06 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 03 வாராந்த சந்தைகளும் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

(அ) **ரம்பேவ பல்நோக்கு கட்டிடம்**

கேட்போர் கூடம் மற்றும் நூல் நிலையத்திற்காக ஈடுபடுவதற்குத் திட்டமிடப்பட்ட ரூபா 28.00 மில்லியன் செலவில் 2015 மார்ச் 15 ஆந் திகதி நிர்மாணித்து பூர்த்திசெய்யப்பட்ட இக்கட்டிடம் 2015 மே 15 ஆந் திகதி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டிருந்தது.

i. கட்டிடம் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டதுடன் கேட்போர் கூடத்தினை வாடகைக்கு வழங்கி ஒரு மாதத்திற்கு ரூபா 310,000 வருமானம் எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கட்டிடம் பொதுமக்களுக்காகத் திறக்கப்பட்ட 2015 மே 15 ஆந் திகதியிலிருந்து 2019 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த வருமானம் ரூபா 52,500 ஆக இருந்ததனால் கேட்போர் கூடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சராசரி மாதாந்த வாடகை வருமானம் ரூபா 1,010 ஆகும். எனவே கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதன் மூலம் எதிர்ப்பார்க்கப்பட்ட வருமான இலக்கினை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

ii. நூல் நிலையத்தை நடாத்துவதன் மூலம் 500 வாசக அங்கத்தவர்களையும் அதன் மூலம் ரூபா 12,500 வருமானத்தினையும் பெற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நூல் நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சராசரி மாதாந்த வாடகை வருமானம் ரூபா 816 ஆக இருந்ததனால் எதிர்ப்பார்த்த வருமான இலக்கினை அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. நூல் நிலையத்தில் 2019 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு சிறுவர் அங்கத்துவம் 76 ஆகவும் வயதானோர் அங்கத்துவம் 122 ஆகவும் இருந்ததுடன் நாளாந்தம் நூல் நிலையத்தைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததனால் நூல் நிலையத்தைப் பயன்படுத்துதல்

எதிர்பார்த்த மட்டத்தை அடைந்திருக்கவில்லை. அதற்கிணங்க தேவைப்பாடு முறையாக இனங்காணப்படாது திட்டமிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

iii. இப்பிரதேசத்தில் இவ்வாறான தன்மையுள்ள கட்டிடம் இல்லாததனால் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் வியாபார சமூகங்களைப் போல சுற்றுலாப் பயணிகளும் இக்கட்டிடத்தை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதன் மூலம் அக்குழுக்களுக்கும் பிரதேச சபைக்கும் மறைமுகமான பிரதிபலன்கள் கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் அவ்வாறான பயன்பாடு இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

iv. பிரதேச சபையின் பொருளாதார நிலைமையை வலுப்படுத்துவதற்காக இக்கட்டிடம் நிர்மாணக்கப்பட்டிருந்தும் கட்டிடத்தின் நாளாந்த பராமரிப்பிற்காக செலவு செய்யப்படுகின்ற பணத்தையேனும் ஈடு செய்யுமளவுக்கு வருமானம் கிடைக்காததனால் இச்செயற்திட்டமானது பிரதேச சபையின் பொருளாதார நிலைமையை பலவீனப்படுத்துவதற்கு காரணமாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) **திரப்பனை பல்நோக்கு கட்டிடம்**

---

கேட்போர் கூடம், கண்காட்சி மண்டபம், உணவகம், கலந்துரையாடல் அறை என்பவற்றிற்காகப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 42.51 மில்லியன் செலவில் 2016 யூன் 06 ஆந் திகதி நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்ட இக்கட்டிடம் 2017 யூலை 14 ஆந் திகதி பொதுமக்களின் பாவனைக்காகத் திறக்கப்பட்டிருந்தது.

i. கட்டிடத்தில் $^1/_4$ அளவானவை மருத்துவ சிகிச்சைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2019 ஒக்டோபர் 31 ஆந் திகதி வரையும் அப்பகுதி பயன்படுத்தாது காணப்பட்டதுடன் தளமாடியில் நூல் நிலையம் மாத்திரம் செயற்பட்டு வந்திருந்தது.

ii. மேல்மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் பல்வேறு சமூக செயற்பாடுகளை நடாத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் ரூபா 310,000 மாதாந்த வருமானமும் 30,000 மாதாந்தம் கடை வாடகை வருமானமும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. கட்டிடத்தை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிய 2017 யூலை 14 ஆந் திகதியிலிருந்து இன்று வரை பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த வருமானம் ரூபா 57,000 ஆக இருந்ததனால் சராசரி மாதாந்த வருமானம் ரூபா 2,280 ஆக இருந்தது. அதற்கிணங்க கட்டிடங்களை துப்பரவு செய்தல் மற்றும் பராமரித்தல் செலவினையேனும் ஈடுசெய்யாமையினால் பிரதேச சபையின் நிதி நிலைமையானது காணப்பட்ட நிதி நிலைமையை விட கீழ் மட்டத்திற்கு விழுவதற்கு காரணமாக இருந்தது.

(இ) **நாவுல பிரதேச சபையின் பல்நோக்கு கட்டிடம்**

---

கண்காட்சி மற்றும் பயிற்சி நிலையம், ஆயுர்வேத நிலையம், மேற்கத்திய வைத்திய நிலையம், சமூக நிலையம், நூல் நிலையம் மற்றும் விரிவுரை மண்டபம் என்பவற்றிற்காக ஈடுபடுத்துவதற்குத் திட்டமிட்டு ரூபா 50.77 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடம் 2017 சனவரி 03 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இக்கட்டிடத்திலிருந்து ஒரு ஆண்டிற்கு கிடைக்கக்கூடிய சராசரி பிரதிபலன் ரூபா 11,108,438 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரை முழுமையாக விளைவற்றுக் காணப்பட்ட இக்கட்டிடம் அத்திகதியின் பின்னர் விரிவுரை மண்டபத்தினை சபைப் பேரவையாகப் பயன்படுத்துவதனைத் தவிர்த்து ஏனைய எதுவித நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்பட்டிருக்காமையினால் குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்ட சொத்தாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) **மினிபே பிரதேச சபையின் பல்நோக்கு கட்டிடம்**

சபை அலுவலகம், சுகாதார மற்றும் ஆயுர்வேத நிலையம், மகளிர் சிகிச்சை என்பவற்றிற்காக ஈடுபடுத்துவதற்குத் திட்டமிட்டு ரூபா 62.35 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடம் 2017 ஏப்ரல் 05 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மகளிர் சிகிச்சையானது பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் அமைந்துள்ள கட்டிடத்திலும் ஆயுர்வேத நிலையம் பிரதேச சபைக்குச் சொந்தமான கட்டிடத்திலும் நடாத்தப்பட்டு வந்ததனால் கட்டிடத்தில் இச்செயற்காட்டிற்காக ஒதுக்கப்பட்ட பகுதி குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) **அம்பன்கங்க கோரலே, கங்கவட கோரலே, தும்பனை ஆகிய பிரதேச சபைகளின் பல்நோக்கு கட்டிடம்**

| பிரதேச சபை | செலவுகள் ரூபா மில்லியன் | நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட திகதி | திறக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| அம்பன் கோரலே | 44.99 | 2015-12-30 | 2016-03-03 |
| கஸ்கவட கோரலே (குருதெனிய மற்றும் தென்னங்கும்புற) | 42.98 | 2015-12-09 | 2015-12-12 |
| தும்பனை | 58.50 | 2015-11-18 | 2015-11-18 |

மேலே குறிப்பிட்ட பல்நோக்கு கட்டிடங்களின் விரிவுரை மண்டபங்களிலிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்கள் கிடைக்காது குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) **பியகம மற்றும் மதுராவல பல்நோக்கு கட்டிடம்**

முன்பள்ளி, நூல் நிலையம் மற்றும் கேட்போர் கூடம் என்பவற்றிற்காக ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட ரூபா 43.42 மில்லியன் செலவில் பியகம பிரதேச சபைக்காக நிர்மாணிக்கப்பட்ட மாவரமண்டிய இரண்டு மாடி பல்நோக்கு கட்டிடத்தின் மேல் மாடியில் காணப்படுகின்ற கேட்போர் கூடம் குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டதுடன் கட்டிடத்திலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

கேட்போர் கூடம், ஆயுர்வேத மருத்துவ சிகிச்சை, மகளிர் சிகிச்சை என்பவற்றிற்காக ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 20.62 மில்லியன் செலவில் மதுராவல பிரதேச சபைக்காக நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தின் கேட்போர் கூடமும் குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(எ) **வலல்லாவிட பல்நோக்கு கட்டிடம்**

-------------------------------------------------------------

முன் பள்ளி, நூல் நிலையம், கேட்போர் கூடம் என்பவற்றிற்காக பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 23.84 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடத்தின் கேட்போர் கூடத்தை பயன்பாட்டிற்கு எடுத்தல் ஆரம்பிக்கப்பட்ட 2017 பெப்ரவரி 17 ஆந் திகதியிலிருந்து இன்ற வரை 2 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததனால் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

(ஏ) **வலப்பனே பிரதேச சபையின் ராகல பல்நோக்கு கட்டிடம்**

-----------------------------------------------------------------------------------------------------

ரூபா 46.71 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடத்தின் கீழ் தள மாடியில் சந்தையை நடாத்துவதற்கும் தளமாடியினை விரிவரை மண்டபத்திற்காக ஈடுபடுத்துவதற்கும் திட்டமிடப்பட்டு அனைத்து நிர்மாணங்களையும் பூர்த்திசெய்து 2016 யூன் 22 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஏப்ரல் 07 ஆந் திகதி பொதுமக்களுக்காக திறக்கப்பட்டிருந்தது.

i. வாராந்த சந்தைகளை நடாத்துவதற்கு போதியளவு இடவசதி இல்லாத கீழ் தளமாடியின் கூரை 521 சதுர மீற்றர்களைக் கொண்டிருந்ததுடன் அதற்கு அருகாமையிலுள்ள தளமாடியின் 575 சதுர மீற்றர் அளவான கட்டிடம் இன்று வரை குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டது.

ii. முழுக் கட்டிடமும் சுற்றுலா விடுதி ஒன்றின் அமைப்பில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததால் சந்தையை நடாத்துவதற்குப் பொருத்தமற்றது என்பது அவதானிக்கப்பட்டது.

iii. பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளாததன் காரணமாக கூட்ட மண்டபத்திலுள்ள உபகரணங்களும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ஐ) **நாகொட பல்நோக்கு கட்டிடம்**

-------------------------------------------------------

நூல் நிலையம், ஆயுர்வேத நிலையம், முன் பள்ளி கேட்போர் கூடம், மகளிர் சிகிச்சை என்பவற்றிற்காக ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 49.04 மில்லியன் செலவில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு 2016 மார்ச் 09 ஆந் திகதி நாகொட பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்ட இக்கட்டிடம் 2017 நவம்பர் 02 ஆந் திகதி பொதுமக்களுக்காகத் திறக்கப்பட்டிருந்தது.

i. 1973 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு பேணப்பட்டு வந்திருந்த பொது நூல் நிலையமானது இக்கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் கேட்போர் கூடம் சில நாட்கள் மாத்திரம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. கட்டிடத்தின் ஏனைய இடவசதிகள், ஒதுக்கீடு செய்யப்பட்ட செயற்பாடுகள், ஏனைய இடங்களில் நடாத்தப்படுவதனால் அப்பகுதி குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஒ) **கல்பிட்டி நூல் நிலையக் கட்டிடம்**

-------------------------------------------------------------

புறனெகும செயற்திட்டத்தின் மூலம் கல்பிட்டி பிரதேச சபைக்கு ரூபா 18.90 மில்லியன் செலவு செய்து நுரைச்சோலை நூல் நிலையக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டது.

i. புறனெகும செயற்திட்டத்தின் மூலம் 2017 பெப்ரவரி 27 ஆந் திகதி கல்பிட்டி பிரதேச சபைக்கு நூல் நிலைய கட்டிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 1 ½ ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டதன் பின்னர் 2018 ஒக்தோபர் 07 ஆந் திகதி பொதுமக்களுக்காகத் திறக்கப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

ii. 5,034 சதுர அடி பரப்பளவைக் கொண்ட ஒரு கட்டிடம் நூல் நிலையத்திற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை 1859 சதுர அடி அதாவது கட்டிடத்தின் 36.93 சதவீதமான பகுதி குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

iii. சாத்திய வள ஆய்வின் போது பிரதேசத்திலுள்ள மக்களின் விருப்பம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படாது 469 நபர்கள் நூல் நிலையத்தில் அங்கத்துவத்தைப் பெற்று பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்று எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் 2019 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரை 159 நபர்கள் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

iv. நூல் நிலையத்திலிருந்து பிரதேச சபைக்கு வருடாந்தம் ரூபா 399,000 வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதற்கு வாசகர்கள் இல்லாமையின் காரணமாக நூல் நிலையம் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 2019 யூன் 30 ஆந் திகதி வரை ரூபா 50 மாத்திரம் வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

v. கல்பிட்டி பிரதேசத்தில் தீவிர குடிநீர் பிரச்சினை காணப்படுவதுடன் பிரதேசத்திலுள்ள மக்கள் தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து நீரை கொள்வனவு செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதுடன் புறனெகும செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி திட்டங்களைத் தெரிவுசெய்யும் போது பிரதேசத்திலுள்ள தேவைப்பாடு தொடர்பாக முறையாக ஆய்வு செய்யப்படாது செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஓ) திஸ்ஸமகாராம வாராந்தச் சந்தை**

ரூபா 48.48 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட திஸ்ஸமகாராம சந்தையினை இணைத்துள்ள மீன் சந்தையினை குத்தகைக்கு வழங்குவதற்கு பிரதேச சபை தவறியிருந்தது. அதன் காரணமாக வாராந்த சந்தைக் காணியின் மீன் சந்தை குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) **சூரியவெவ வாராந்தச் சந்தை**

------------------------------------------------------

ரூபா 44.88 மில்லியன் செலவில் 2016 யூன் 15 ஆந் திகதி நிர்மாண வேலை பூர்த்திசெய்யப்பட்டு சூரியவெவ பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்ட மீன் சந்தை 2019 மே 25 ஆந் திகதி வரை குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்டதுடன் தற்பொழுது கட்டிடம் முழுவதும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தும் குத்தகைக்குப் பெற்றவரினால் கட்டிடம் பயன்படுத்தப்படாது வீதியிலும் திறந்த நிலத்திலும் வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டது.

வாராந்தச் சந்தை நிலம் மீன் சந்தையினையும் உள்ளடக்கியிருந்ததுடன் மழைநீர் வடிந்தோடுவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படாமையின் காரணமாக பாவனையாளர்களினதும் வியாபாரிகளினதும் நடவடிக்கைகளுக்கு தடையாக இருந்தது.





(க) **இரத்தொட வாராந்தச் சந்தை கட்டிடம்**

-----------------------------------------------------------------------

ரூபா 12.06 மில்லியன் செலவில் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு 2015 மார்ச் 17 ஆந் திகதி இரத்தொட பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள வாராந்தச் சந்தைக்காக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடம் 2019 ஏப்ரல் 08 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டதுடன் 2018 ஏப்ரல் 08 ஆந் திகதி கட்டிடத்தின் மேல் மாடியின் ஒரு பகுதியில் இப்பிரதேச சபையின் நூல் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வாராந்தச் சந்தை நடைபெறாத பிரதேசம் என்பதனால் வாராந்தச் சந்தைக்கான தேவைப்பாடு இல்லாமையினால் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டுக் காணப்பட்ட தளமாடியானது கடைகளாக உருவாக்கப்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்காக பிரதேச சபையினால் ரூபா 1.5 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் அக்கடைகள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3.2.3 எதிர்பார்த்த பிரதிபலன்கள் இல்லாத செயற்திட்டங்கள்

-------------------------------------------------------------------------------------------

இச்செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணங்களைப் பூர்த்திசெய்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட உப செயற்திட்டங்களுக்கு மத்தியில் 16 உப செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது என்பது கணக்காய்வுத் தெரிவு செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

(அ) **மாவத்தகம பஸ்தரிப்பிடம்**

-------------------------------------------

சேவை வசதிக் கட்டணங்கள் மற்றும் பொதுமக்கள் மலசலகூட முறைமையுடன் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட இந்த பஸ்தரிப்பிடம் ரூபா 43.79 மில்லியன் செலவில் 2016 திசெம்பர் 02 ஆந் திகதி நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு மாவத்தகம பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.



i. இந்த பஸ்தரிப்பிடம் 2018 ஒக்தோபர் 14 ஆந் திகதி வரை பொதுமக்களுக்காகத் திறந்துவைக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

ii. கடை வாடகைகளைத் தவிர்த்து பஸ்தரிப்பிடத்திலிருந்து எதிர்ப்பார்த்த வருடாந்த வருமானம் ரூபா 5.70 மில்லியனாக இருந்த போதிலும் இன்று வரை வருடாந்த வருமானம் ரூபா 1.28 மில்லியனாக இருந்தது.

iii. பொதுமக்கள் பாதுகாப்பாக பஸ்களில் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் தேவையான வசதிகள் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

iv. மேல் மாடியில் நிர்மாண வேலைகள் முடிவுறுத்தப்படாமையின் காரணமாக பஸ்தரிப்பிடங்களில் பயணிகளுக்கு மறைப்பினை வழங்குவதற்காக நிர்மாணிக்கப்பட வேண்டிய மறைப்புக் கூரையை (canopy) தயாரிப்பதும் தாமதமடைந்திருந்தது.



(ஆ) **உடுதும்பர நீர்த்திட்டம்**

---

நக்கிள்ஸ் மலைகளிலிருந்து வெளிவருகின்ற இயற்கையான நீருற்று நீரினைப் பயன்படுத்தி இக்குடிநீர் செயற்திட்டம் ரூபா 41.63 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2018 சனவரி 18 ஆந் திகதி நிர்மாணக் குறைபாடுகளுடன் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

i. இச்செயற்திட்டத்தின் கீழ் 400 குடும்பங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 193 நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் 123 இணைப்புக்களானவை காணப்பட்ட நீர் வழங்கல் முறைமையின் கீழ் நீர் இணைப்புக்களைப் பெற்றுக்கொண்ட குடும்பங்களாக இருந்ததுடன் இச்செயற்திட்டத்தின் கீழ் வழங்கிய புதிய இணைப்புக்களின் எண்ணிக்கை 70 மாத்திரமாகும். அதற்கிணங்க செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

ii. பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் நீர் கட்டண வருமானம் போதியளவில் அதிகரித்தல் அவதானிக்கப்படவில்லை.

iii. கால ரீதியாக நீரின் தரத்தைப் பரீட்சித்து தரமான நீர் வழங்கப்பட வேண்டிய போதிலும் இச்செயற்திட்டத்தின் நீர் ஆய்வுகூட பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **இரத்தோட்டை நீர்த்திட்டம்**

---

ரூபா 27.78 மில்லியன் செலவில் இரத்தோட்டை பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமுல்படுத்தப்படுகின்ற பொல்வத்தாகந்த நீர்த்திட்டம் 2017 யூன் 30 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தும் பிரதேச சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் பொதுமக்களின் பாவனைக்கு நீரை வழங்குவதும் நீர் கட்டணத்தை அறவீடு செய்வதும் 2018 யூலை மாதம் வரை தாமதமடைந்திருந்தது.

i. ஒரு நாளைக்கு $160m^3$அளவான நீர் வீதம் ஒரு ஆண்டிற்கு $58{,}400m^3$ அளவான நீரைப் பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் 2018 யூலையிலிருந்து 2019 யூன் வரை வழங்கப்பட்டுள்ள நீரின் அளவு $22{,}185m^3$ ஆக இருந்ததனால் $36{,}215m^3$ அளவான நீர் குறைவாக வழங்கியதன் காரணமாக இச்செயற்திட்டத்திற்கு எதிர்பார்த்த நீரின் அளவை வழங்க முடியாதிருந்ததுடன் எதிர்பார்த்த வழங்கும் இயலளவில் 38 சதவீதம் அளவானவை மாத்திரம் அடைந்து கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

ii. பிரதேச சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கு இணங்க $58{,}400m^3$ அளவான நீரை வழங்குமளவிற்கு போதியதான நீர் மூலம் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டதனால் போதிய ஆய்வுகள் இன்றி செயற்திட்டம் திட்டமிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

iii. இப்பிரதேசத்தில் ஏனைய சமூக நீர்த்திட்டம் காணப்படுவதுடன் அந்த நீர்த்திட்டத்தின் மூலம் குடியிருப்பவர்களின் நீர் வேண்டுதலை வழங்குவதற்கு முடியாதிருந்தமையானது இப்புதிய நீர்த்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு காரணமாக இருந்தும் அதன் மூலம் குடியிருப்பாளர்களின் நீர்த்தேவைப்பாட்டினை பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்ததனால் செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

iv. பிரதேச சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் வடிகட்டித் தாங்கிகளின் மூலம் எதிர்ப்பார்த்த அளவினைப் போல எதிர்பார்த்த தரத்தினைக் கொண்ட நீரினை வழங்குவதற்கு முடியாதுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) **லக்கல பல்லேகம நீர் செயற்திட்டம்**

-----------------------------------------------------

ரூபா 58.57 மில்லியன் செலவு செய்து பூர்த்திசெய்யப்பட்ட இச்செயற்திட்டம் 2017 மே 25 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

செயற்திட்டத்தின் கீழ் 328 குடும்பங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் ஆரம்பத்தில் நீர் இணைப்புக்களை வழங்குவதற்கு எதிர்பார்த்த குடும்பங்களின் எண்ணிக்கை 250 ஆகும். எனினும் இன்று வரை வழங்கப்பட்டுள்ள நீர் இணைப்புக்களின் எண்ணிக்கை 146 ஆக இருந்ததனால் செயற்திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்த்த இலக்கினை முழுமையாக அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது.

(உ) **இராஜாங்கனை நீர் செயற்திட்டம்**

-----------------------------------------------------------

தெயட கிருல நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தோண்டப்பட்ட ஒரு கிணற்றை பயன்படுத்தி ரூபா 18.86 மில்லியன் செலவு செய்து இந்த நீர்ப்பம்பி செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் நிர்ணயிக்கப்பட்ட வேலைகளை முடிவுறுத்தியதன் பின்னர் 2016 யூலை 04 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

i. இராஜாங்கனை குளத்திலிருந்து விவசாய நடவடிக்கைகளுக்காக நீரை பெற்றுக்கொள்கின்ற மக்கள் அந்நீரை நாளாந்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியிருந்தும் வறண்ட காலத்தில் நீரை வழங்கும் போது முகங்கொடுக்கின்ற பிரச்சினைகளின் காரணமாக இராஜாங்கனை நகரத்தினை உள்ளடக்கி கிராமப் பிரதேசங்களில் குடியிருக்கும் 200 குடும்பங்களுக்கு நீரை வழங்கும் எதிர்ப்பார்ப்பில் இச்செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற நீர் குடிப்பதற்கு பொருத்தமான நிலையில் இல்லாததனால் குடிநீரை வழங்கும் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

ii. செயற்திட்டத்தை பிரதேச சபைக்கு ஒப்படைத்ததன் பின்னர் தொடக்க 05 ஆண்டுகளுக்குள் நீர்க் கட்டணமாக ஒரு ஆண்டிற்கு ரூபா 1.37 மில்லியன் அளவான வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்தும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நீர் செயற்திட்டம் திறக்கப்பட்ட திகதியிலிருந்து இன்று வரை பெற்றுக்கொள்ளப்பட்ட முழுமையான வருமானம் ரூபா 0.52 மில்லியனாகும்.

(ஊ) **பொல்பிதிகம பல்நோக்கு கட்டிடம்**

---------------------------------------------------------------

ரூபா 24.04 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட சுகாதார நிலையம், பகல்நேர கண்காணிப்பு நிலையம், கேட்போர் கூடம் என்பவற்றை உள்ளடக்கிய பல்நோக்கு கட்டிடம் 2017 ஒக்தோபர் 27 ஆந் திகதி பிரதேச சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.




கட்டிடத்தின் கேட்போர் கூடத்தினை பிரதேச சபையின் சபைப் பேரவையாகவும் பகல்நேர கணக்காணிப்பு நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை களஞ்சியமாகவும் பயன்படுத்தப்பட்டதுடன் சுகாதார சிகிச்சைக்காக ஒதுக்கப்பட்ட பகுதியை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க கட்டிடம் முழுவதும் எதிர்ப்பார்த்த குறக்கோள்களுக்குப் புறம்பாக பயன்படுத்தப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(எ) **கலன்பிந்துனுவெவ பல்நோக்கு கட்டிடம்**

---------------------------------------------------------------------------

நூல் நிலையம், கேட்போர் கூடம், முன்பள்ளி என்பவற்றிற்காக பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 34.80 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இப்பல்நோக்கு கட்டிடம் 2017 திசெம்பர் 21 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியே பொதுமக்களுக்காகத் திறக்கப்பட்டிருந்தது.

i. இப்பல்நோக்கு கட்டிடத்தின் கேட்போர் கூடத்தை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் பிரதேச சபைக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 210,000 வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் கடந்த மாதங்களின் உள்ளபடியான வருமானத்தின் சராசரி ரூபா 1,091 ஆகும்.

ii. பல்நோக்கு கட்டிடங்களைத் திட்டமிடும் போது முன்பள்ளி, பகல்நேர கண்காணிப்பு நிலையம் மற்றும் சிகிச்சையை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தாமையினால் வருடாந்தம் ரூபா 54,000 ரூபா 48,000 ரூபா 240,000 தொகையான வருமானங்கள் மற்றும் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்களை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(ஏ) **பதவிய பல்நோக்கு கட்டிடம்**

-------------------------------------------------------

கேட்போர் கூடம், சபை அலுவலகம், நூல் நிலையம் என்பவற்றிற்கு ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 17.08 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடம் 2015 மே 15 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியிலேயே பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறக்கப்பட்டிருந்தது.

i. சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் கட்டிடங்களைத் திட்டமிடும் போது சபை அலுவலகம் மற்றும் நூல் நிலையம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாணிக்கும் போது கேட்போர் கூடத்தினை மாத்திரம் நிர்மாணித்திருந்ததனால் செயற்திட்டங்களிலிருந்து எதிர்ப்பார்த்த வருமான இலக்குகளும் சமூக பிரதிபலன்களும் கிடைக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

ii. கேட்போர் கூடத்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் ஒரு மாதத்திற்கு ரூபா 160,000 வருமானம் எதிர்ப்பார்க்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கேட்போர் கூடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாதாந்த சராசரி வாடகை வருமானம் ரூபா 10,322 ஆகும்.

(ஐ) **ஹொரவ்பதான பல்நோக்கு கட்டிடம்**

---

கூட்ட மண்டபம், முன்பள்ளி, பகல்நேர கண்காணிப்பு நிலையம், மருத்துவ சிகிச்சை என்பவற்றை நடத்துவதற்காக ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 39.94 மில்லியன் செலவில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 2015 ஆகஸ்ட் 12 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டது.

i. எதிர்பார்த்தவாறு மருத்துவ சிகிச்சை நடாத்தப்படாததன் காரணமாக 661.56 சதுர அடி அதாவது கட்டிடத்தில் 23.91 சதவீதம் அளவானவை விளைவற்றுக் காணப்பட்டதுடன் அதிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 600,000 வருடாந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

ii. கூட்ட மண்டபத்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் ஒரு மாதத்திற்கு ரூபா 360,000 வருமானம் எதிர்ப்பார்க்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கிடைத்துள்ள சராசரி மாதாந்த சராசரி வாடகை வருமானம் ரூபா 3,250 ஆகும்.

iii. இக்கட்டிடமானது ஹொரவ்பத்தான பிராந்திய வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ளதனால் மருத்துவ சிகிச்சைக்காக நிர்மாணங்களை மேற்கொள்ளும் தேவைப்பாடு இனங்காணப்படாது திட்டமிடப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது.

(ஒ) **இபலோகம பல்நோக்கு கட்டிடம்**

---

விரிவுரை மண்டபம், முன் பள்ளி, பகல்நேர கண்காணிப்பு நிலையம், மருத்துவ சிகிச்சை நிலையம் என்பவற்றை நடாத்திச் செல்வதற்காகத் திட்டமிட்டு ரூபா 40.79 மில்லியன் செலவில் 2016 மார்ச் 01 ஆந் திகதி நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு 2016 யூன் 29 ஆந் திகதி பொதுமக்கள் பயன்பாட்டிற்காகத் திறக்கப்பட்டிருந்தது.

இதில் கேட்போர் கூடத்திலிருந்து ரூபா 310,000 தொகையான மாதாந்த வாடகை வருமானம் எதிர்ப்பார்க்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கிடைத்துள்ள சராசரி மாதாந்த வாடகை வருமானம் ரூபா 5,335 ஆகும்.

(ஓ) **வெலிவிடிய திவுதுர பல்நோக்கு கட்டிடம்**

---

நூல் நிலையம், மருத்துவ சிகிச்சை, முன் பள்ளி, கேட்போர் கூடம் என்பவற்றிற்காகத் திட்டமிட்டு ரூபா 33.45 மில்லியன் செலவில் நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்ட இக்கட்டிடம் 2016 ஏப்ரல் 07 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் 2016 ஆகஸ்ட் 28 ஆந் திகதி பொதுமக்களின் பாவனைக்காகத் திறக்கப்பட்டிருந்தது.

முன்பள்ளி நடாத்தப்படாததுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட இடம் கேட்போர் கூடத்தின் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்றது என பிரதேச சபையின் தகவல்களின் பிரகாரம் தெளிவாகியுள்ளது. கேட்போர் கூடத்திற்கான நாளாந்த வாடகை ரூபா 3000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கிணங்க ரூபா 30,000 மாதாந்த வாடகை வருமானத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் திறக்கப்பட்ட திகதியிலிருந்து இன்று வரை கிடைத்துள்ள வருமானத்தின் பிரகாரம் சராசரி மாதாந்த வாடகை வருமானம் ரூபா 2,819 ஆகும்.

(ஔ) **கரந்தெனிய, தவலம, பிடபெத்தர, கொடபொல, இமதுவ பிரதேச சபைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடங்கள்**

| பிரதேச சபை | செலவுகள் (ரூபா மில்லியன்) | நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்ட திகதி | திறக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| கரந்தெனிய | 25.45 | 2015-05-12 | 2015-05-12 |
| தவலகம | 59.10 | 2017-02-28 | 2017-09-14 |
| பிடபெத்தர | 46.01 | 2016-08-11 | 2017-07-10 |
| கொடபொல | 44.92 | 2016-07-06 | 2017-07-10 |
| இமதுவ | 36.54 | 2017-03-06 | 2017-06-28 |

மேலே குறிப்பிட்ட செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் வரைதல் மற்றும் திட்டமிடல் செயற்பாடுகளுக்காக தனியார் நிர்மாண ஆலோசனைக் கம்பனிகளின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் அந்நிறுவனங்களினால் வழங்கப்பட வேண்டிய சாத்திய வள ஆய்வு அறிக்கை எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்கூறிய பிரதேச சபையினால் வழங்கிய தகவல்களின் பிரகாரம் கேட்போர் கூடங்களிலிருந்து போதியளவான வருமானம் கிடைக்கவில்லை எனவும் எதிர்ப்பார்த்த செயற்பாடுகளான நூல் நிலையம், பகல்நேர கண்காணிப்பு நிலையம், சுகாதார சிகிச்சை முதலியவற்றிற்காக கட்டிடம் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(க) **புளத்கொஹுபிடிய பல்நோக்கு கட்டிடம்**

நூல் நிலையம், சுகாதார நிலையம், ஆயுர்வேத நிலையம், விரிவுரை மண்டபம், பொது மலசலகூட முறைமை என்பவற்றிற்காக ஈடுபடுத்துவதற்குத் திட்டமிட்டு ரூபா 26.33 மில்லியன் செலவில் 2016 மார்ச் 31 ஆந் திகதி நிர்மாணங்கள் முடிவுறுத்தப்பட்டு பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்ட இக்கட்டிடம் 2017 பெப்ரவரி 23 ஆந் திகதி பொதுமக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்டிருந்தது.

மொத்த நில அளவு 335.06 சதுர மீற்றரான இக்கட்டிடத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது மாடிகளின் 249.78 சதுர மீற்றரில் கேட்போர் கூடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இதிலிருந்து ஒரு நாளைக்கு ரூபா 3000 வீதம் ஒரு மாதத்திற்கு ரூபா 30,000 வாடகை வருமானம் எதிர்ப்பார்க்கப்பட்டிருந்தும் அது குறைப்பயன்பாட்டு நிலையில் காணப்பட்டது. பிரதேச சபையின் புத்தகங்களின் பிரகாரம் இக்கட்டிடம் பொதுமக்களுக்குத் திறக்கப்பட்ட 2017 பெப்ரவரி 23 ஆந் திகதியிலிருந்து 2019 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த வருமானம் ரூபா 18,000 ஆக இருந்ததனால் பிரதேச சபையின் நிதி நிலைமையை அதிகரிப்பதற்காக

இக்கட்டிடத்தை நிர்மாணித்ததனால் எதுவித பங்களிப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் கட்டிடத்தின் பராமரிப்புச் செலவுடன் ஒப்பீடு செய்யும் போது அது பிரதேச சபைக்கு ஒரு செலவுப் பொறுப்பு என்பதுவும் அவதானிக்கப்பட்டது.

(கா) **அயகம பல்நோக்கு கட்டிடம்**

இக்கட்டிடத்துடன் பஸ்தரிப்பிடம் மற்றும் பொது மலசலகூட முறைமையை நிர்மாணிப்பதற்காக ரூபா 30.58 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதி நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டு பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இக்கட்டிடத்தை பஸ்தரிப்பிடம், உணவுச்சாலை, இளைஞர் நிலையம், சுகாதார நிலையம், புத்தகக் கடை, நூல் நிலையம், பாமசி, தகவல் நிலையம், உடல்நல நிலையம் என்பவற்றிற்காக ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் 2017 மே 25 ஆந் திகதி இடம்பெற்ற மண்சரிவினால் இழக்கப்பட்ட பொலிஸ் நிலையத்திற்காக இக்கட்டிடத்தின் 05 அறைகளில் பொலிஸ் நிலையம் செயற்பட்டு வந்ததனால் உடல்நல நிலையமும் பொலிஸ் நிலையத்தின் பாவனைக்காக வைக்கப்பட்டிருந்தது. இந்நிலைமையின் கீழ் பஸ்தரிப்பிடம் பேணப்பட்டிருந்தும் கட்டிடத்திலிருந்து எதிர்ப்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(கி) **ஹெட்டிபொல தகனச்சாலை**

மிகவும் பின்தங்கிய குறைந்த வருமானம் பெறுபவர்கள் வசிக்கின்ற மக்கள் நடமாற்றமற்ற பிரதேசமாகிய ஹெட்டிபொல பிரதேசத்தில் ரூபா 16.49 மில்லியன் செலவில் தகனச்சாலை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு நாளைக்கு அதில் 2 இறந்த உடல்களைத் தகனம் செய்யலாம். இதற்காக பிரதேச சபை அதிகாரப் பிரதேச சபைக்குள் ரூபா 7,000 மற்றும் அதிகார சபைக்கு வெளியே ரூபா 8,000 ஆக கட்டணங்களை அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு பிரதேச சபைக்கு ஒப்படைத்ததன் பின்னர் 2016 மார்ச் 09 ஆந் திகதி பயன்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் தகனச்சாலை அமைந்துள்ள பொது மயானத்தில் குறைந்த கிரயத்தில் அடக்கம் செய்யும் நடவடிக்கை இடம்றெவதனால் தகனச்சாலைக்காக போதியளவு வேண்டுதல்கள் இருக்கவில்லை. எனவே பிரதேச சபையின் வருமானம் அதிகரிப்பதற்குப் பதிலாக பிரதேச சபைக்கு மேலதிக செலவுப் பொறுப்பு ஏற்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது.

| **ஆண்டு** | **வருமானம்** | **ஊழியர் சம்பலம் மற்றும் படிகளைத் தவிர்த்து பராமரிப்புத் திட்டம்** |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| 2017 | 41,000 | 70,130 |
| 2018 | 44,000 | 27,750 |
| 2019 | 54,000 | 220,000 |

**3.3.2.4 எதிர்பார்த்த குறிக்கோள்களுக்கு புறம்பாக அலுவலகத்தை நடாத்துவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடம்**

---

மகளிர் சிகிச்சை, மருத்துவ சிகிச்கை, முன் பாடசாலை, பகல்நேர கண்காணிப்பு நிலையம், நூல் நிலையம், கேட்போர் கூடம் முதலிய பிரிவுகளை உள்ளடக்கி நிர்மாணிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடம் எதிர்ப்பார்த்த செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படாது பிரதேச சபை அலுவலகமாக பயன்படுத்தப்படுகின்றது என்பது தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

(அ) **உடுபத்தாவ பல்நோக்கு கட்டிடம்**

---

ரூபா 43.63 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த இக்கட்டிடத்தின் மேல் மாடியினை சமூக மண்டபத்திற்காகவும் தளமாடியினை ஆயுர்வேத மற்றும் மேற்கத்திய மருத்துவ சிகிச்சை, மகளிர் சிகிச்சை, சிறுவர் கண்காணிப்பு நிலையம் என்பதற்காகவும் ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.



i. செயற்திட்ட அலுவலகத்தினால் இக்கட்டிடம் 2016 சனவரி 08 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. பிரதேச சபை செயற்பட்ட சபைக் கட்டிடம் உடைந்துள்ளதன் காரணமாக 2017 யூன் 12 ஆந் திகதியிலிருந்து இக்கட்டிடம் சபை அலுவலகமாகப் பயன்படுத்தப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது.

ii. ஆயுர்வேத மற்றும் மேற்கத்திய மருத்துவ சிகிச்சை, சிறுவர் கண்காணிப்பு நிலையம், மகளிர் சிகிச்சை முதலிய எதுவும் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

iii. ஆயுர்வேத மற்றும் மேற்கத்திய சிகிச்சை, மகளிர் சிகிச்சை, பகல்நேர கண்காணிப்பு நிலையம் என்பவற்றிற்காக பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள (partition) தளமாடியை அலுவலகத்திற்காகப் பயன்படுத்தியதனால் அலுவலகத்திற்குப் பொருத்தமான உள்ளகத்திட்டம் இல்லாதிருந்ததனால் அலுவலக முகாமைத்துவம், ஆளணி முகாமைத்துவம் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டதனால் பொதுமக்களுக்கு அலுவலகத்திலிருந்து எதிர்பார்த்த சேவைகள் கிடைத்திருக்கவில்லை என்ப:து அவதானிக்கப்பட்டது.

iv. சமூக மண்டபத்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் பொருளாதார நலன்களாக ஒரு நாளைக்கு ரூபா 20,600 வீதம் ஒரு ஆண்டிற்கு ரூபா 3,460,000 வருமானத்தைப்

பெற்றுக்கொள்ளக்கூடியதாக மதிப்பீடு செய்யப்பட்டதனால் பிரதிபலன்கள் மிகை மதிப்பீடு செய்யப்பட்டு சாத்திய வள ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது எனவும் ஒரு நாளுக்கு ரூபா 2500 தொகையான கட்டணம் அறவிடப்பட்டிருந்தும் சமூக மண்டபத்திலிருந்து இன்று வரை வருமானம் கிடைத்திருக்கவில்லை எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) **பாதஹேவாஹெட பல்நோக்கு கட்டிடம்**

சபை அலுவலகம், நூல் நிலையம், சமூக நிலையம் என்பவற்றிற்காக ஈடுபடுத்துவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபா 46.72 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டிடம் 2017 யூன் 07 ஆந் திகதி பிரதேச சபைக்கு ஒப்படைத்ததன் பின்னர் 2017 ஒக்தோபர் 28 ஆந் திகதி பொதுமக்களுக்காக திறக்கப்பட்டிருந்தும் சபை அலுவலகத்தை செயற்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.4 பெறுகை நடைமுறை

இச்செயற்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட உப செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்காக பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிட்ட இரட்டை உறை முறைமை பயன்படுத்தப்பட்டிருந்தது. திட்டங்கள், வடிவமைப்பு மற்றும் நிர்மாண ஆய்வுக்காக ஆலோசனைக் கம்பனிகளைத் தெரிவு செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை ஆலோசனைக் கோவையில் குறிப்பிட்ட தரத்தை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைமையின் (QCBS) அடிப்படையில் ஆலோசனைக் கம்பனிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

ஒரு பிரதேச சபைக்கு ரூபா 50 மில்லியன் தொடக்க ஒதுக்கீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டத்தின் நிர்மாண ஒப்பந்தத்திற்காக இரட்டை உறை முறைமையினைப் பயன்படுத்திப் நிர்மாண ஒப்பந்தக்காரர்களில் அதிக அளவானவர்களுக்கு ஒப்பந்கங்களை வழங்குவதற்காக கேள்வி மனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது என்பது ஒப்பந்தத்திற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுக்களின் எண்ணிக்கை குறித்து பார்த்த போது காணக்கூடியதாக இருந்தது. ஒப்பந்தக்காரர்களின் தகமைகள் தொடர்பாக முதலாவது உறையில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்களை வழங்குவதற்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் பதிவுசெய்த தகமைகளைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களுக்கு முடியாதிருந்தமை இந்நிலைமைக்கு காரணமாக இருந்ததனால் ஒப்பந்தத்திற்காக போட்டி விலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன என்பதனை கணக்காய்வின் போது உறுதிபடுத்திக்கொள்ள முடியாதிருந்தது. தரத்தை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைமையின் அடிப்படையில் ஆலொசனைக் கம்பனிகள் தெரிவு செய்யப்பட்டதனால் போட்டி விலைகளின் கீழ் அந்த ஒப்பந்தங்களை வழங்க முடியாதிருந்தது. அதற்கிணங்க புறனெகும செயற்திட்டத்தின் நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஆலோசனைக் கம்பனிகளைத் தெரிவு செய்த போது சிக்கனத்தன்மை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

4. **சிபாரிசுகள்**

-----------------

i. உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் மற்றும் மாகாண சபைகள் மட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் காணப்பட வேண்டியதுடன் அவற்றின் தேவைப்பாடுகள் முன்னுரிமை அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அல்லது மாகாண சபைகளுக்கு அமுல்படுத்தப்பட முடியாத அபிவிருத்திச் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயற்திட்டங்களிலிருந்து நிதி வசதிகளை வழங்குதல் மிகவும் பயனுறுதி வாய்ந்ததாகும்.

ii. சரியான தகவல்களைப் பெற்றுக்கொண்டு சாத்திய வள ஆய்வினை மேற்கொண்டு உயர்ந்த வெற்றித்தன்மை மற்றும் முதலீடு செய்த பணத்திற்கு நேரொத்த வகையிலான அதிக பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய உப செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக மாத்திரம் கடனைப் பயன்படுத்துதல் வேண்டும்.

iii. மத்திய அரசாங்கத்தின் கடனைப் பெற்றுக்கொண்டு மேற்கொள்கின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளின் போது பிரதேச சபைகளால் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக மாத்திரம் அக்கடன் முதலீடு செய்யப்பட வேண்டியதுடன் நிறைவேற்றுவதற்கு அதிகாரம் இருந்தும் கட்டாயமற்ற செயற்பாடுகளுக்காக முதலீடு செய்வதற்கு தேவையான நிதிகளை வழங்குவதற்காக உள்நாட்டுக் கடன் அபவிருத்தி நிதிகள் மற்றும் வணிக வங்கிகள் முதலியவற்றிடமிருந்து கடனைப் பெற்றுக்கொள்வதற்கும் அக்கடன் தவணைப் பணங்களை மீளச்செலுத்துவதற்கும் பிரதேச சபைகள் ஆர்வம் காட்டுதல் வேண்டும்.

iv. தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய திட்டங்களை உருவாக்குவது மாத்திரமன்றி விபரமான செயற்திட்ட அறிக்கைகளும் தனிப்பட்ட ஆலோசனைக் கம்பனிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதனால் உப செயற்திட்டங்களிலிருந்து எதிர்ப்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை தொடர்பாக பொறுப்புள்ள அவர்களையும் பொறுப்புக் காலத்திற்கு உட்படுத்தல் வேண்டும்.

v. கைவிடப்பட்டுள்ள கட்டிடங்களை ஏனைய ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தும் இயலுமையினை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

ஒப்பம்./டபிள்யூ. பி. சீ. விக்ரமரத்ன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பி.சீ விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

2022 ஜூன் 02 திகதி

## B. Overall Project Implementation Plan

| DESCRIPTION | 2011 | | | 2012 | | | | 2013 | | | | 2014 | | | | 2015 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Q2 | Q3 | Q4 | Q1 | Q2 | Q3 | Q4 | Q1 | Q2 | Q3 | Q4 | Q1 | Q2 | Q3 | Q4 | Q1 | Q2 | Q3 | Q4 |
| **Component 1: Local Government Infrastructure and Service Delivery Improvement** | | | | | | | | | | | | | | | | | | | |
| 1.1 Planning and priority subproject identification (assisted by PPTA) | | | | | | | | | | | | | | | | | | | |
| 1.2 Review of subprojects by PMU and SPCUs | | | | | | | | | | | | | | | | | | | |
| 1.3 Recruitment of design and supervision consultants | | | | | | | | | | | | | | | | | | | |
| 1.4 Preparation of feasibility studies, detailed design and bid documents of subprojects | | | | | | | | | | | | | | | | | | | |
| 1.5 Bidding and contract award for civil works and equipment | | | | | | | | | | | | | | | | | | | |
| 1.6 Construction and procurement of equipment | | | | | | | | | | | | | | | | | | | |
| 1.7 Operation and maintenance support | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| **Component 2: Local Government Policy Reform and Capacity Building Support** | | | | | | | | | | | | | | | | | | | |
| 2.1 Recruitment of consultants for data updates and entry for local authorities | | | | | | | | | | | | | | | | | | | |
| 2.2 Data updates and entry | | | | | | | | | | | | | | | | | | | |
| 2.3 Bidding for IT system development (hardware and software) | | | | | | | | | | | | | | | | | | | |
| 2.4 IT system development | | | | | | | | | | | | | | | | | | | |
| 2.5 Implementation of the new system and business processes | | | | | | | | | | | | | | | | | | | |
| 2.6 Evaluation of implementation of the new system and business processes | | | | | | | | | | | | | | | | | | | |
| CDTA *Capacity Development Technical Assistance* | | | | | | | | | | | | | | | | | | | |
| Recruitment of CDTA consultants | | | | | | | | | | | | | | | | | | | |
| Review of existing tax, licensing and approval systems and processes | | | | | | | | | | | | | | | | | | | |
| Review of software developed by ICTA *Institute of Computer* | | | | | | | | | | | | | | | | | | | |
| Preparation for the two packages under Component 2 | | | | | | | | | | | | | | | | | | | |
| Review and approval of the proposed changes by the government | | | | | | | | | | | | | | | | | | | |
| Drafting by-laws and regulations for streamlining and improvement | | | | | | | | | | | | | | | | | | | |
| Review and approval of the proposed by-laws and regulations by the government | | | | | | | | | | | | | | | | | | | |
| Support for implementation of the new system and business processes | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| **Component 3: Project Management and Administration Support** | | | | | | | | | | | | | | | | | | | |
| 3.1 Assignment of core staff in PMU and SPCUs | | ◊ | | | | | | | | | | | | | | | | | |
| 3.2 PMU and SPCUs fully staffed | | | | ◊ | | | | | | | | | | | | | | | |
| 3.3 Recruitment of project management consultant (assisted by PPTA) | | | | | | | | | | | | | | | | | | | |
| 3.4 Reform plan development (assisted by PPTA) | | | | | | | | | | | | | | | | | | | |
| 3.5 Review of reform plans by PMU and SPCUs | | | | | | | | | | | | | | | | | | | |
| 3.6 Development of project performance management system | | | | | | ◊ | | | | | | | | | | | | | |
| 3.7 Project management and administration | | | | | | | | | | | | | | | | | | | |
| 3.8 Project-specific evaluation survey | | | | | | | | | | | | | | | | | | | |
| 3.9 Reform plan implementation and monitoring | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |
| Implemenation of Gender Action Plan | | | | | | | | | | | | | | | | | | | |

—— time frame for first group of subprojects ═══ time frame for other subprojects

ICTA = Information & Communication Technology Agency, MLGPC = Ministry of Local Government and Provincial Councils, PMU = project management unit, PPTA = project preparatory technical assistance, SPCU = subproject coordination unit

**பின்னிணைப்பு-02**

**2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்கள்**

| தொடர் இலக்கம் | உள்ளூராட்சி நிறுவனம் | உபசெயற்திட்டம் | பெறுமதி (ரூபா மில்லியன்) | முடிவுறுத்திய திகதி | தாமதம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| 1 | வெல்லவாய பிரதேச சபை | தகனச்சாலை | 11.72 | 2017 சனவரி 05 | 5 |
| 2 | சியம்பலாண்டுவ பிரதேச சபை | பஸ்தரிப்பிடம் மற்றும் மலசலகூட முறைமை | 6.37 | 2017 சனவரி 08 | 8 |
| 3 | கந்தகெடிய பிரதேச சபை | பிரதேச சபை அலுவலகம் மற்றும் வாராந்த சந்தை நிர்மாணம் | 25.45 | 2017 சனவரி 10 | 10 |
| 4 | ஹசலக, மினிபே பிரதேச சபை | பல்நோக்கு கட்டிட நிர்மாணம் | 62.35 | 2017 சனவரி 31 | 31 |
| 5 | லுனுகல பிரதேச சபை | பிரதேச சபை அலுவலகம் மற்றும் பல்நோக்கு கட்டிட நிர்மாணம் | 36.97 | 2017 பெப்ரவரி 10 | 41 |
| 6 | வெலிஓயா, பலாங்கொடை, இரத்தினபுரி பிரதேச சபைகள் | பல்நோக்கு கட்டிட நிர்மாணம் | 30.01 | 2017 பெப்ரவரி 13 | 44 |
| 7 | பெங்மடுல்ல, இரத்தினபுரி பிரதேச சபை | பல்நோக்கு கட்டிடத்துடன் வாராந்த சந்தை நிர்மாணம் | 44.92 | 2017 பெப்ரவரி 13 | 44 |
| 8 | தனமங்வில பிரதேச சபை | பிரதேச சபை அலுவலவகம் மற்றும் வாராந்த சந்தை நிர்மாணம் | 36.17 | 2017 பெப்ரவரி 25 | 56 |
| 9 | மடியாந்தோட்ட, கேகாலை பிரதேச சபை | வாராந்த சந்தை மற்றும் பொது மலசலகூட முறைமையை நிர்மாணித்தல் | 36.60 | 2017 பெப்ரவரி 25 | 56 |
| 10 | இலஹ, பானஹேவாடுஹட பிரதேச சபை | அலுவலகத்துடனான பல்நோக்கு கட்டிட நிர்மாணம் | 46.72 | 2017 மார்ச் 30 | 61 |
| 11 | உடுதும்பர பிரதேச சபை | நீர் வழங்கல் செயற்திட்டம் | 41.63 | 2017 மார்ச் 30 | 61 |
| 12 | ஹந்தன்கமுவ, வில்கமுவ பிரதேச சபை | நீர் வழங்கல் செயற்திட்டம் | 61.00 | 2017 மார்ச் 31 | 62 |
| 13 | மஹியங்கனை பிரதேச சபை | நீர் வழங்கல் செயற்திட்டத்தின் சுத்திகரிப்பு நிலையம் | 46.25 | 2017 மே 30 | 150 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | மஹியங்கனை பிரதேச சபை | நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நீர்க் குழாய் முறைமை | 45.74 | 2017 மே 30 | 150 |
| 15 | உடபலாத பிரதேச சபை | நீரை பெற்றுக்கொள்ளும் இடம் மற்றும் நீரை பகிர்ந்தளிக்கும் முறைமையை நிர்மாணித்தல் | 183.53 | 2017 யூன் 30 | 180 |
| 16 | மஹவ/பொல்பிதிகம பிரதேச சபை | நீர் வழங்கல் செயற்திட்டத்தை நிர்மாணித்தல் | 34.83 | 2017 யூன் 30 | 180 |
| 17 | வண்ணாத்திவில்லு, புத்தளம் பிரதேச சபை | நீர் வழங்கல் செயற்திட்டத்தை நிர்மாணித்தல் | 57.94 | 2017 யூன் 30 | 180 |
| 18 | மெதகம | வாராந்த சந்தை மற்றும் அணைக்கட்டினை மேம்படுத்தல் | 15.52 | 2017 யூன் 30 | 180 |
| 19 | புல்னேவ, கல்னேவ பிரதேச சபைகள் | நீர் வழங்கல் செயற்திட்டத்தை நிர்மாணித்தல் | 20.02 | 2018 சனவரி 12 | 377 |

## E. Detailed Cost Estimates by Year

($ million)

| Item | Total Cost | Year 1 | Year 2 | Year 3 | Year 4 |
|---|---|---|---|---|---|
| A. Investment Costs | | | | | |
| 1 Civil Works and Equipment | 40.14 | - | 5.02 | 12.04 | 23.08 |
| 2 Environment and Social Mitigation | 0.40 | 0.10 | 0.10 | 0.10 | 0.10 |
| 3 System Development | 1.39 | 0.13 | 0.24 | 0.49 | 0.53 |
| 4 Consultants | 6.58 | 1.02 | 1.76 | 1.90 | 1.90 |
| a. Design and Supervision | 4.29 | 0.66 | 1.15 | 1.24 | 1.24 |
| b. Project Management and Capacity Development | 2.29 | 0.35 | 0.62 | 0.66 | 0.66 |
| 5 Taxes | 7.54 | 0.30 | 1.13 | 2.22 | 3.88 |
| Subtotal (A) | 56.05 | 1.54 | 8.26 | 16.76 | 29.49 |
| B. Incremental Recurrent Costs | | | | | |
| 1 Project Management and Administration | 4.18 | 1.05 | 1.05 | 1.05 | 1.05 |
| 2 Taxes | 0.08 | 0.02 | 0.02 | 0.02 | 0.02 |
| Subtotal (B) | 4.26 | 1.07 | 1.07 | 1.07 | 1.07 |
| Total Base Cost | 60.31 | 2.61 | 9.32 | 17.82 | 30.56 |
| C. Contingencies | 7.45 | 0.08 | 0.88 | 2.15 | 4.34 |
| D. Financing Charges During Implementation | 1.01 | 0.02 | 0.11 | 0.29 | 0.59 |
| Total Project Cost (A+B+C+D) | 68.77 | 2.70 | 10.32 | 20.26 | 35.49 |
| % Total Project Cost | 100.00% | 3.93% | 15.00% | 29.46% | 51.60% |

Note: Numbers may not sum precisely because of rounding